தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்:
புழுதிவாரித் தூற்றுபவர்
தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர் வரினும் நில்லேன் ; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா. காரியாலயம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1	சென்னை 23—10—1954 சனிக்கிழமை	இதழ் 17

என்ன நினைந்தாரோ! – நேரு – தன்னை மறந்தாரோ!
முன்னைக் கதை யாவும் - மனதில் - மூண்ட காரணத்தால் ....
காத்திடச் சொன்னாரோ! – ஐயா! வார்த்தைகள் ஜாக்கிரதை!

'வார்த்தைகள் ஜாக்கிரதை'

இந்த எச்சரிக்கை இன்று நேற்று எழுந்ததல்ல: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் பெரியார் வள்ளுவர் ஆணித்தரமாக எச்சரித்திருக்கிறார்; பேசும் பொழுதும்-சொற்களைப் பிரயோகிக்கும் பொழுதும் நாம் எவ்வளவு விழிப்பாக இருக்க வேண்டுமென்று. சொல்லுகின்ற சொற்கள் அனைத்தும் பயனுடைய சொற்களாக இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல அவர் வாக்கு—அப்படி நாம் சொல்லுகின்ற சொற்களுக்கு "வெட்டுச் சொல்" வேறொன்றும்-தேடிப்பார்த்தாலும், இருக்கக் கூடாதாம்! இந்த கருத்தை "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து" என்ற அழகுத்தமிழ் வெண்பாவால் விளக்கி இருக்கிறார்; எனவே ஒருவன் தரத்தை-அவன் பேசும சொற்களை வைத்துக் கொண்டே தீர்மானிக்கலாம் என்பது தெளிவாகிறது: ஒருவனுக்கு உயர்வையும் தாழ்வையும் அவன் பேசுகின்ற சொற்களே அவனுக்கு தேடித் தருவதால் சொற்களை-நிதானித்து உரைத்துப் பார்த்து பேசுதல் மிக மிக இன்றியமையாதது: சொல்காக்கத் தவறியபலர் சோகத்திற்காளாகி - தவறை உணர்ந்து வருந்துகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

பெரிய மனிதர்கள் கூட, சில நேரங்களில் — ஆத்திரத்திற்கு முதலிடம் தந்து—அறிவை பின் தள்ளிவிட்டு, 'என்ன பேசுகின்றோம்' 'யார் முன் பேசுகின்றோம்' என்பன பற்றி எண்ணிப் பாராமல் 'காட்டு ராஜாக்க' ளென்ற நினைப்போடு—இதைப் பேசினால்—நம்மைப் பற்றி தவறாக எண்ணுவாரே அறிவுடையோர் என்பதை மறந்து விட்டு-'தலைக்கனத்தால்' தகாதவார்த்தைகளை உமிழ்கின்றனர்: அப்படி அவர் செய்யும் குற்றங்களை வெகுவிரைவில் மறப்பதோடு மட்டுமல்ல — மற்றவர்களுக்கு 'உபதேசம்' செய்வதில் இறங்கி விடுகின்றனர்; அன்றொரு நாள் அநாகரீக மொழி பேசினோமே-அந்த நம்தகாத வார்த்தைகளால் தாக்கப் பட்டோர் 'நெஞ்சப் புண்' இன்னும் ஆறியும் இருக்காதே - இந்நிலையில் "ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி" என்ற முறையில் பேசுகிறோமே—அதுவும் பாராளுமன்றத்தில்-என்ன நினைப்பர் நம்மைப்பற்றி இது ஒரு பைத்தியம் போல் இருக்கிறது" என்ற முடிவுக்கல்லவா வந்து விடும் மக்கள் மன்றம்—என்பதை நினைவிற்கு கொண்டு வராமல்' பண்டித நேரு அவர்கள் பேசி இருக்கிறார்; அந்த பேச்சிற்கு 'வார்த்தைகள் ஜாக்கிரதை' என்ற மகுடம் சூட்டி சென்ற 14—10—54 மெயில் இதழ் திட்டி-பாரீர் எங்கள் பண்டிதரின் பெருந்தன்மையை-எவ்வளவு அறிய கருத்தை சீரிய முறையில் விளக்கி இருக்கிறார் என்ற முறையில் செய்தியை பிரசுரித்திருக்கிறது: இதைப் பார்க்கும் பொழுது 'அந்தோ பெரிய மனிதர்களெல்லாம் ஏன் இப்படி முரண்பட்டு வாழ்கின்றனர் என்ற வருந்தம் எழுகின்றது.

மனிதன் பிறக்கிறான்; வளர்கிறான்; பெரிய மனிதனாகி பட்டம் பதவிகளையும் அடைகிறான். பிறக்கின்றவர்களில் பெரும்பாலோர் வளரத்தான் செய்கிறார்கள்; ஆனால் வளர்கின்றவர்கள் அனைவரும் பெரிய மனிதனாகி, பட்டம் பதவிகளை அடைய முடிவதில்லை. பெரிய மனிதனாகிறான் என்றாலும், ஏதோ சாதாரண மனிதர்களைக் காட்டிலும் சற்று அறிவு அதிக முள்ளவன் என்றுதான் நாம நினைக்கிறோம். தன்னை, தன் நாட்டை, மக்களை, உலகை உணர்கின்ற சக்தி படைத்தவன், சுயமரியாதையை விரும்புபவன், பிறருக்கு மரியாதை தருபவன், இவனைத்தான் அறிவுடையவன் பெரிய மனிதன், மககள் செல்வாக்குப் பெற்றவன் என்று நாம் கருதுகிறோம்; மக்களும் அப்படித்தான் கருதுவார்கள். அப்படிக்கின்றி நாட்டாட்சி ஏற்று விட்டோமென்றமமதையில், உலகை உணர்ந்து கொண்டோம், உலகம் தன்னை மதிக்கிறது என்ற இறுமாப்பில் பிறரை மதியாது வாய்க்கு வந்ததை ஒரு தலைவன் அதுவும் பதவியிலுள்ளவன் உளறிக் கொட்டினால், அவனை மக்கள் என்ன நினைப்பர்; உலகம் தான் என்ன நினைக்கும்! மக்களை மதியாத தலைவன் மதிப்பிழந்து செல்வாக்கற்று, செல்லாக் காசாக நேரிடுமென்பதை உலக சரித்திரம் எத்தனையோ சான்றுகளைக் காட்டியுள்ளது. இல்லையா?

நமக்கெல்லாம் வார்த்தைகளால் ஏற்படும் ஆபத்துகளை எண்ணிப் பார்த்த பல அறிஞர்கள் குறிப்பாக ஆங்கிலநாட்டறிஞர் பெர்னாட்ஷா போன்றவர்கள் வார்த்தைகளை மிக மிக ஜாக்கிரதையாக பயன் படுத்தினர் பேச்சில்மட்டும் அல்ல, எழுத்திலும் கூட. காரணம் நாவன்மையாகிய நலம் மனித இனத்தின் செல்வம். அந்தசெல்வம் என்றும் உயர்வினைத் தருவதோடு மட்டுமல்ல தனிச்சிறப்புடையதும் கூட: சொல்வன்மையாலும் வார்த்தை நயத்தாலும்-எத்தனையோ பெரிய பெரிய காரியங்களை யெல்லாம் சாதித்திருக்கின்றனர்: வாளும்-வேலும் சாதிக்க முடியாத பல காரியங்களை வார்த்தைகள் சாதித்திருக்கின்றன.

அன்றுதென்னாட்டு மக்களைப் பார்த்து 'பைத்தியங்கள்' முட்டாள்தனமானவர்கள் 'காட்டுமிராண்டிகள்' என்பனபோன்ற புன்மொழிசிந்தி நம்மை எல்லாம் களத்திற்கு அழைத்த பண்டித நேரு அவர்கள் இவ்வளவு விரைவில் குற்றத்தை மறந்து விட்டிருக்கிறார். உபதேசம் செய்கின்றார் மற்றவர்களைப் பார்த்து வார்த்தைகள் ஜாக்கிரதை என்று' என்ன நினைப்பது அவரைப்பற்றி; முன்பொருமுறை சொல் காக்கத்தவறிய காந்தியார் கூட தன் குற்றமுணர்ந்து மன்னிப்பு வேண்டினார் தென்னாட்டவரிடம்; ஆனால் இந்த 'மேதை' யோ-குற்றத்தை உணராதது மட்டுமல்ல - மற்றவர்களுக்கு புத்திசொல்ல முன் வருகிறார்-நாகாக்கச் சொல்லுகிறார் நம்மைப் பார்த்து - நாகாக்கத் தவறிய பண்டிதர். தன்னிடம் இருக்கும் 'இருளை' உணரவில்லை! எப்படி உணர முடியும்? அவர் தான் 'ஜோதி' — அதிலும், 'ஆசியாஜோதி' ஆயிற்றே"!

'வில்வம்'

எண்ணம்

''தி. மு. கழகம் கடந்த 1953 ஜூலைத் திங்கள் பதினைந்தாம் நாளன்று துவங்கிய மும்முனைப் போர்களில் ஒன்றான ''டால்மியாபுரம் பெயரை கல்லக்குடியாக மாற்று'' என்ற போராட்டம் நமக்கு வெற்றி தருகிறது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைத்தருகிறேன்; நாம் மாற்ற வேண்டுமெனக் கோரிய 'டால்மியாபுரம்' இனி இருக்காது! 'கல்லக்குடி' என்றே அதிகார பூர்வமாக மாற்றப்படும்-இன்னும் பத்துப் பதினைந்து நாளில்- என்று எனக்கு டெல்லி வட்டாரத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது'' என, இராயபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பேசிய, பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

இந்தச் செய்தியை, நான் படித்துப் பார்த்தபோது, பூரித்துப்போனேன். அன்று ஒரு திருநாளாகவே பட்டது எனக்கு. கஷ்டப்படுகிறவர்கள் அவமானத்தைத் துடைக்க ஆசைப்படுபவர்கள் அதிலே வெற்றிகண்டே தீருவார்கள் என்கிற நம்பிக்கை அசைக்க முடியாத அளவுக்கு ஏற்பட்டது!

* * *

''தோற்றுவிட்டது போர்!'' என்றார்கள், தோல்வியே வாழ்வாய்க் கொண்டவர்கள். கேலி பேசினார்கள், கீழ்க்குணம்மிகுந்தோர். 'சோறு போடுமா' எனக் கேட்டார்கள், விவேகமில்லாதவர்கள். 'மலையோடு மோதுகிறோம்' என்றார்கள், மலைக்கும் மண்மேட்டுக்கும் பேதம் தெரியாதவர்கள். ''இதெல்லாம் ஒரு போராட்டமா?'' என்று கேட்டார்கள், வினாடிக்கு ஒன்று பேசுபவர்கள். எல்லோரையும் குப்புறக் கவிழ்த்துவிட்டு, இதோ, 'கல்லக்குடி' காட்சியளிக்கப்போகிறது!

* * *

அந்தநாள்......

1953 ஜூலை 15ந் தேதி...... திராவிட சமுதாயத்தின் வரலாற்றிலே ஒரு பொன்னேடு, இனி எதிர்காலம் அந்த நாளை வெற்றித் திருநாளாக, பெருமையோடு கொண்டாடும்.

யார் அவர்?
பெரிய முதலாளி!

ஊர் எது?
வடக்கே உள்ளது.

இங்கு ஏன் வந்தார்?
முதல் அடிக்க!

எந்த ஊருக்கு?
கல்லக்குடிக்கு!

வந்தார்; பழைய பெயரை மாற்றினார், தன் பெயர் சூட்டினார். வறுமையில் வாடிய உள்ளூராருக்கு ஆசைகள் காட்டினார். 'பெயர் சூட்டு'த் திருநாளுக்கு ஆதரவு தேடினார்; சூட்டினார். தமிழ் செத்து, முதலாளித்துவம்-அங்கு திமிர்நடை போட்டது! வாடகைக்குக் குடியிருக்க வந்தவன், வீட்டுக்குத் தன் பெயர் சூட்டினால் வீட்டுக்காரன் சும்மா இருக்க முடியுமா?

எழுந்தது தி. மு. கழகம்!
போர்! போர்! போர்!

சென்னைத் தலைமை நிலையம், குழுவைக்கூட்டி முடிவு செய்தது! 'போர் மூண்டே தீரும்!' என எச்சரித்தது! போருக்குத் தேதியையும், தலைவரையும் நிர்ணயித்தது. ''கருணாநிதி தலைவர்; ஜூலை 15ந் தேதி போர் நாள்'' இது தலைமை நிலையத்தில்கூடிய குழுவின் முடிவு. ஜனநாயகப்படி செய்யப்பட்ட முடிவு! தேதி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. சர்க்காருக்கும் அறிவிக்கப்பட்டது.

அன்று......

பலபல வென்னுங் காலையிலே, கல்லக்குடியிலே படைகள் தங்க அமைக்கப்பட்ட பந்தல், கோலாகலமாகக் காட்சியளித்தது! ஒருவரோடு ஒருவர் அளவளாவுவதும், ''நீ பின்னால், நான் முன்னால்'' என்று போட்டி போடுவதுமாக இருந்தார்கள், உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. சாப்பாடு என்று ஒன்று உண்டு என்பதும், அதற்கு இன்னின்ன வேளை உண்டு என்பதும் எல்லோருக்கும் மறந்துபோயிற்று. ''மனிதன், சாப்பிடுவதில்லை''என்கிற மாதிரி கல்லக்குடி காட்சியளித்தது. அங்கும் இங்கும் நடக்கிறார்கள்.

''ஆயிரம் லோகல் போலீஸ்''!
''இல்லை-ரிசர்வ் பாதி!''
''டி. எஸ். பி.வந்துவிட்டார்''
''சர்க்கிள் முத்துவெங்கட்ராமன், நம்தோழர்களை அழைத்து விசாரிக்கிறார்.''
''எம். எஸ். பி. வரலாம்.''

—இதுதான் பேச்சு! ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொன்னதும், தோழர்களுக்கு ஆனந்தப் பெருக்கு! இருக்காதா? ''பலமில்லாதவர்கள்'' என எதிரிகள் சொல்லித் திருப்திப்பட்டுக்கொள்கிற தி. மு.கழகத்தின் போராட்டத்திற்கு, சென்னைப் போலீஸ் முழுமையும் திரண்டுவந்தால்—மகிழ்ச்சி பிறக்காதா!

போர் துவங்கிற்று.

கலைஞர் கருணாநிதி முன் நடக்க, படை செல்கிறது ஸ்டேஷனுக்கு. நினைத்தாலே, மெய் சிலிர்க்கிறது. திராவிட நாடு திராவிடர்க்கே.'' ''கல்லக்குடி காண்போம்'' ''வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக!''—முழங்குகிறது, கடலனைய மக்கள் கூட்டம்!

ஸ்டேஷனருகில்வந்து நம் படை நிற்கிறது.

உள்ளே போலீஸ் படை அணிவகுப்பதும், பகுதி பிரிப்பதுமாக இருக்கிறது.

ரயில் வருகிறது.

நம் படை உள்ளே செல்கிறது.

'போஸ்டர்' ஒட்டப்படுகிறது!

கருணாநிதி, சுற்றியிருந்த பல லாயிரம் மக்களைப் பார்த்து, கைகூப்பி வணங்குகிறார், ஜிவ் ராக. (முல்லைசத்தி, குழந்தைவேல், குமாரவேல்) ஆகியோருடன் தண்டவாளத்தில் படுக்கிறார். சட்டம் திணறுகிறது. கைது செய்கிறது!

அடுத்த படை, கர்மவீரர் இராமசுப்பையா தலைமையில்!—கைது!

மூன்றாவது படையில் சிறியேன் போகிறேன்.

அடி, உதை, மிதி, துப்பாக்கி வேட்டு!—கதை முடிகிறது. போலீஸுக்கு! இனி என்ன?

கொடிய செக்ஷனில் வழக்கு!

ஆறுமாதம்—கருணாநிதி குழுவுக்கு!

மூன்றுமாதம் — இராம சுப்பையா குழுவுக்கு!

ஒன்றரை ஆண்டுகள்—என் குழுவுக்கு!

பிறகு செஷன்ஸில் அது ஊர்ஜிதம்!

இப்போது ஹைகோர்ட்டில் நிற்கிறது!

இன்னும் முடியவில்லை!

* * *

வெற்றிச் செய்தி வீடுதேடி வருகிறது!

''வீரர்கள் போருக்குப் போகும்போது வெற்றியையுப் கூட்டிப் போகிறார்கள்!''

''நீ உன் கடமையைச் செய்; அது உனக்கு வெற்றி தேடித் தரும்!''

'துணிந்தவனுக்குக் காலம் அனுகூலம்''

— இதெல்லாம் பெரியோர் வாக்குகள்!

நன்றி!

பேரன்புடையீர்!

வணக்கம். 3-10-54 ஞாயிறன்று நடைபெற்ற திருச்சி மாவட்ட மன்றத் தேர்தலில் தங்கள் மேலான வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்த லால்குடி தொகுதி வாக்காளர்களுக்கும், வெற்றிக்காக அல்லும் பகலும் அரும்பாடு பட்டு எல்லா வகையிலும் ஒத்துழைத்த அருமை நண்பர்களுக்கும், பேராதரவு காட்டிய பொதுமக்களுக்கும், வாழ்த்துக்கள் வழங்கிய தோழர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியறிதலுள்ள வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

லால்குடி
13-10-54

அன்பன்
அன்பில்தர்மலிங்கம்

''கிளர்ச்சி'' (மாத மிருமுறை)

ஆசிரியர்: இரா. சு. தங்கப்பழம்

15—10—54ல் இதழிலிருந்து

''கடவுளைத் தேடிய
கருப்புப் பெண்ணின் அனுபவங்கள்''
தொடர்கிறது.

மூலம்: பெர்னாட்ஷா. தமிழாக்கம்: தங்கப்பழம்.

பேரறிஞர் பெர்னாட்ஷாவின் ஆழ்ந்த கருத்துக்கள்! கிண்டல்கள்! நகைச்சுவைகள்!!

கடவுள்களைப் பற்றிய தர்க்கரீதியான வாதங்கள்!!!

16 பக்கங்கள்
தனி இதழ் 0-2-0
ஆண்டுச் சந்தா ரூ. 3-0-0

''கிளர்ச்சி''
திருமங்கலம்
மதுரை மாவட்டம்

ஏற்றுக்கொள்வதா?

-முடிவு-

ஏற்றுக்கொள்ளக்கூடாது!

ஏன்? எப்படி? எதற்காக?

காரணமும், பரிசுபெற்ற கடிதமும் அடுத்த இதழில்!

இறுதிப் பயணம்

கண்ணதாசன்

1939 ஜனவரி 15

வெய்யசிறைக் கோட்டத்திற் கலயந்தாங்கி
வேகாத கூழுண்டும் கீரை உண்டும்
துய்யமனம் குழம்பாது சிறையிருந்த
தூயவரில் இருவீரர் 'பட்டர்' ஆட்சி
எய்தகணை மார்பூடு நுழைந்தபோதும்
எள்ளளவும் கலங்காத இருவர்; கைகள்
கொய்தமலர் இதழ்கொட்டி மண்ணுறைற்போல்
'கோலே' யானார்! கொடுஞ்சிறையில் உயிரை நீத்தார்!

'அரிஜன்' எனக் காந்தியரால் அழைக்கப் பெற்ற
ஆதித் திராவிட சமூகத் துள்ளே
ஒருவனவன்—நடராசன்; உணர்ச்சி மிக்க
உழைப்பாளி; நல்லார்க்கு நல்ல காளை!
பெருகிவரும் வெள்ளத்தில் துளியாய்ச் சேர்ந்து
'பேயாளர்' கொடுமையினுற் சிறையில் மாண்டான்!
உருகிமனம் மெழுகாக—அவனின் பின்னே
உத்தமனும் தாலமுத்து உயிரை நீத்தான்!

நிதறியாத் தாயகமே! தென்னன் நாடே!
திருவிளக்கின் முடியிருக்கும் ஒளியே! சொத்தை
வேதமிலாப் பழநாடே! குறளைத் தன் கை
வேலாகக் கொண்டிருந்த மூவர் வீடே!
பாதகமே அறியாத நீதி தாங்கிப்
பண்பாக வாழ்ந்திருந்தோம்; ஆனல் இன்று
வேதியரால் இருவீரர் சிறையில் மாண்ட
வேதனையை வரலாற்றில் சேர்க்கின்றேமே!

தாய் கதறத் தந்தை அழ, மனையாள் கண்ணீர்
தாரையென உகுத்துவிடச் சிறிய செல்வச்
சேய்களெலாம் மனங்குமுறி 'அப்பா' என்று
தேம்பிவரும் காட்சியினைக் காண்போரெல்லாம்
பாய்வதெனில் முடியாதோ? வாளெடுத்தாற்
பல தலைகள் உருளாதோ! பார்ப்பனீயம்
சாய்வதிலா நெடுங் குன்றே? இந்தித்தாசி
தானைப்ல கொண்டவளோ! ஆனபோதும்

தாலமுத்து நடராசன் சாவுக்குப் பின்
சதிகாரர் ஆச்சாரியாரின் மீது
வேலெடுத்துப் பொதுமக்கள் பாயவில்லை;
வெண்தாடி நல்லாரின் பொறுமையாலே!
"கோலெடுத்தாற் குரங்காடும்; பட்டர் தம்மைக்
குரங்காக ஆட்டிவைக்க முடியும் நம்மால்!
வாலறுப்போம், ஆனலும் 'இம்சை' வேண்டாம்!
"வருங்காலம் நம தென்று" இருந்தார் வீரர்!

பார்ப்பனரின் கால் தாங்கி உடல் வளர்ப்போர்;
பணக்காட்டில் திமிர்கொண்டு நடை நடப்போர்;
தோற்பைகள்—தொப்பைமலை நெடுங்குன்றங்கள்
சூதரெலாம் வாழ்ந்திருக்க இந்த நாட்டு
வேற்படையில் இருவீரர் மாண்டார்; ஐயோ!
வேதனையின் கடலானுர் நாட்டு மக்கள்!
ஆர்ப்பரித்துப் பொதுமக்கள் கிளம்பிடாமல்
'அகிம்சை' மனப் பெரியார்தான் தடுத்து நின்றார்!

சிறையினிலே நடராசன் நோய்வாய்ப் பட்டுத்
திணறுகிருன்; அந்நேரம் அதிகாரத்தின்
வரையறியார் அவனிடம்போய் "ஐயா! இன்று
மன்னிப்புக் கேட்பதெனில் விடுதலைக்கு
வழிசெய்வோம்!" எனச் சொன்னார்! குதித்தெழுந்து
"மன்னிப்பா! மடையர்களே! தமிழர்சாதி
பிழை செய்து உயிர் வாழும் தகைய தல்ல!
பேசாதீர் ! நாவடிப்பேன் !

1939 மார்ச் 12

தாலமுத்து நடராசன் கல்லறைக்குத்
தமிழக கூட்டம், தோள்மீது செங்கல்தூக்கி
கோல விழிநீர் சிந்திச்செல்லுங்காட்சி
கொலைகாரர் நெஞ்சிறனும் இரக்கம் சேர்க்கும்!
ஓலமிடும் பெற்றோர்கள் பின்னே செல்ல
உயர் நாட்டுக் காளையர்கள் முன்னம்போகி
யாவரும் வந்திடுகாட்டுள் நின்றபோது
அறிவாளர் நம் அண்ணு இது உரைப்பார் :—

(தாலமுத்து புதைக்கப் பட்ட அன்று, இடுகாட்டில் கூடிய பெருங்கூட்டத்தில் அறிஞர் அண்ணு பேசியதன் சுருக்கம்)

"முன்பு தோழர் நடராசன் அடக்கமான காலத்து மீண்டும் இத்தகைய நிகழ்ச்சி தமிழர்கட்கு ஏற்படா தென நினைத்தேன். ஆனல் நாடார் திலகம் தோழர் தால முத்து இறந்ததுகாண மனம் கலங்குகிறது. வழி நெடுக ஆயிரமாயிரம் தமிழர்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுத னர். என்னைப் பொருத்தவரை தோழர்கள் நடராசன் தாலமுத்து மரணத்தை என்னுடைய அண்ணன் தம்பி மரணம் என்றே கருதுகின்றேன். முன்பு நான் சாக் கோட்டை சுயமரியாதை மாநாட்டில் பேசும்போது நாடார் சகோதரர்களைத் தமிழர் அறப்போருக்குவருமாறு வருந்தி அழைத்தேன். ஆனல் அக் காலத்திலும், நீங்கள் அனுப்ப வேண்டும் ஆனல் அவர்களைத் திருப்பிக்கொடுப் பதாக உறுதி கூற முடியாதென்று தெரிவித்துத்தான் அழைத்தேன். அதேபோல் அங்கிருந்து நாடார் தோழர் கள் வந்தனர். அந்த வீரமரபைச் சேர்ந்த தாலமுத்தும் வந்தார், இறந்தார். முன்பு இறந்த நடராசன் மணமாகா தவர். ஆனல் தாலமுத்து மணமானவர் குடும்பத்தை ஒழுங்காக நடத்த இருந்த சமயத்தில் தாலமுத்து இறந்து விட்டார்.

நடராசனை-தாலமுத்தை நாம் இழந்தோம்; கண்ணீர் விட்டோம்; கலங்கினேம்; நெஞ்சு துடித்தோம்; நிலைதடுமாறினேம்; எதைச் செய்வது? எங்குப் போவது என்பதறியாது ஏங்கித் தவித்தோம்; ஆனல் இதே சமயத் தில் ஆச்சாரியார் மார்தட்டி, கருப்புக் கண்ணுடியைத் துடைத்த வண்ணம் கலகலவெனப் பேசுவார். என் பேசமாட்டார்? தமிழன் ஆச்சாரியார் காலின் கீழ் இருக்கிறன். அவர் நினைத்தால் பல தாலமுத்துக்களும் நடராசன்களும் மாயானம் வர முடியும். ஏன், ஆச்சாரி யார் நினைத்தால் நீங்களும் நானும் இங்கு (மயானம்) வரவேண்டியதுதான், இது மிகவும் வெட்க கரமானநிலை! ஆனல் இந்த நிலையில் தான் நாம் இருக்கிறேம்.

இவர்கள் மாண்டார்கள். நாம் கண்ணீர்விட்டோம்; இனி இந்தி படிக்கும் மாணவர்கள் இவ்விருவர் உடலைத் தாண்டிக் கொண்டுதான் படிக்கச்செல்லவேண்டும்.

இரண்டு மணிகளை இழந்தோம். தமிழர் ஆட்சி ஏற் படும்போது இவ்விரு வீரர்களின் தியாகத்தை அடிப் படையாகக் கொண்டே அது எழுப்பப் படும்; வருங் காலத்தில், விடுதலை பெற்ற தமிழகத்தில் தலைவர் பெரி யாரை நடுவில் வைத்து இறந்த இரு மணிகளையும் பக் கத்தில் வைத்து உருவச்சிலை எழுப்ப வேண்டும். என், பெரியார் சற்று தளர்ச்சியடைந்த காலத்தி லெல்லாம் இந்த இரண்டு சமூகங்கள்தான் அதாவது நாடார் ஆதித் திராவிடர் சமூகங்கள்தான் அவருக்கு உதவி செய்து வந்திருக்கின்றன.

அடுத்தவாரம் குடந்தை செல்லப் போகின்றேன். எனது நாடார் தோழர்கட்கு ... போது நான் என்ன

இலக்கியத்தில் காதல்

வள்ளுவன் தந்த இலக்கியம் வகையான சுவைகளைப்படைத்தது. அவனது குறள் மனோரஞ்சித மலர்போன்றது. யார் எதை நினைத்து முகர்ந்தாலும் அந்த மணம், மனோரஞ்சித மலரில் உண்டாவதுபோல பலவகையான சுவைகளையும் மணத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது திருக்குறள். குறிப்பாக வள்ளுவனின் 'காதற் பகுதி' (காமத்துப்பால்) நேற்றும் இன்றும் வேறு எவராலும் சொல்லப்படாத முறையில் அமைந்துள்ளது. அது குடும்ப வாழ்வுக்கு அஸ்திவாரமான காதலை அடிப்படையாகக் கொண்டது. வெறும் 'போக'க் கதையைமட்டும் அவன் கூறவில்லை. வாழ்க்கைக்கு ஒரு வழியையே காட்டினான்.

பெண்களின் கண்களைப் பற்றியும் பார்வையைப்பற்றியும் எல்லாக் கவிஞர்களும் பலப்பல சொல்லிப் போனார்கள். ஒரு கவிஞன், "நான் எய்த இரண்டு கணைகள் எங்கேயோ போய் விழுந்துவிட்டன என்று கருதினேன்; ஆனால், ஐயகோ! இதோ இவளது புருவங்களுக்கு கீழே போய் நின்றுகொண்டு என்னையே திருப்பித் தாக்குகின்றனவே!" என்கிறான்.

இன்னொருவன்— அவன்தான் அரசகுமாரியிடம் 'சரசம்' புரிந்து, அவையிலே 'விரசமாக நடந்துகொண்ட திருவாளர் கம்பர் மகன் அம்பிகாபதி—' அவன், கண்களைப்பற்றி என்னென்ன கூறுகிறான் தெரியுமா?

"நீர்க்கயலை ஏசிய கண்கள்"

"கருகிய பைங்கயலாயன்ன கண்மலர்கள்"

"கரும்புண்டரீகம் அனைய கண்"

"வரியேர் நெடுங்கண்"

(புண்டரீகம்-தாமரை)

இப்படி, நான்கு பாட்டுக்கு ஒரு இடத்தில் கண்களைப்பற்றிப் புதுமை கூறுகிறான். இவனென்ன—"கண்களைப் பாடாதானும் கவிஞனோ;" என்று கேட்கும்படி சகலரும் பாடியிருக்கின்றார்கள். அதுவும் அந்தப்பார்வை வருத்துவதுபற்றி பலப்பல கூறியுள்ளனர். ஆனால் அத்தனைக்கும் மகுடம் வைக்கிறது வள்ளுவன் குறள்.

"அவள் பார்த்துக்கொண்டிருந்தாள்; நான் அதைக் கவனித்தாலும் ஜாடையாக வேறு பக்கம் திரும்பிக்கொண்டிருந்தேன். அப்போது நான் பாராமலே அவள் பார்த்த பார்வை என்னை அவள் தாக்கிவிட்டதாகப்பட்டு, எனக்கு உடம்பு கொதித்தது. 'சரி' என்று நான் பேசாமல் போய்விடாமல், நாமும் கொஞ்சம் பார்ப்போமே என்று நினைத்தேன். அதனால் காதல் வேதனை குறையலாமென்றெண்ணினேன். திரும்பி, அவள்பார்த்த பார்வைக்கு எதிர்ப்பார்வை பார்த்தேன். ஐயோ! ஐயோ! ஐயோ! அவள் மட்டும் பார்க்கும்போது தானே தாக்கினாள். நான் பார்த்தவுடன் ஒரு சேனை... வந்தல்லவா தாக்குகிறது

நோக்கினாள் நோக்கெதிர்
நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னதுடைத்து!

—என்று 'அணங்குறுதல்' பாருங்கள்.

"பாடம் படித்து நிமிர்ந்தவிழி, தனிற்பட்டுத் தெறித்தது மானின்விழி" என்றாரே புரட்சிக் கவிஞர், அதுதானா இது! வாளோடுவாள் மோதித் தெறிப்பதுதானே களத்தில் தானைகளின் போர்க் காட்சி! அதை இரண்டு வரியில் கூறுகிறான் வள்ளுவன். தனியாக நிற்கும் ஒருகாளை, கொஞ்சம் ஆசைப்பட்டுப்பார்த்த பார்வையில் ஒரு படையே வந்து தாக்குகிறது. திருப்பி! நிலைமை இதுதான், ஒரு பெண் நம்மைப்பார்க்கும்போது, நாமும் திருப்பிப்பார்த்தால், அந்தப் பெண் நம்மைச் சும்மாபார்த்தாலும் நம் உயிர் கொலையாய்விடும்! இந்த 'எக்ஸ்பீரியன்ஸ்' எல்லோருக்கும்—ஜன சமுதாயத்தின் இளம்பிள்ளை 'செக்ஷன்' முழுவதுக்கும் — உண்டு!

பார்வையிலே பல 'போஸ்'கள் உண்டு. நேர் 'போஸ்', 'சைட் போஸ்,' கொஞ்சம் சாய்ந்த போஸ்', வலது பக்கக் கண்ணில் ஆரம்பித்து இடது பக்கம்வரை வரும் 'போஸ்'; இப்படிப் பல 'போஸ்'கள் உண்டு. இதிலே ஒரு கண்ணைச் சுருக்கிக்கொண்டு மறுகண்ணால் பார்க்கிற 'போஸ்' ஒன்று உண்டு. இது ரொம்ப 'டெரிபில்' போஸ்! இதுதான் நாளாக ஆக 'கண்ணடித்தல்' என்கிற திருநாமத்தைச் சூட்டிக்கொண்டது. கண் சுருங்குதல் என்றால், முழுக்க மூடிவிடல் என்பதல்ல. லேசாக மூடி, கொஞ்சம் திறந்திருக்கும். இப்படிப்பார்க்கும் போது, எந்தக்கண் சுருங்குகிறதோ அந்தப் பக்கத்து உதடு லேசாக விரிந்து ஒரு 'சைஸாக, ரொம்ப 'நைஸா' கச்சிரிக்கும். அந்தக் கண்ணுக்கு உடையவள் சிரிக்க விரும்பாவிட்டாலும், அது, 'ஆட்டமேட்டிக்'காக நடக்கும். இந்தக் காட்சி, யார்மீது விழுகிறதோ, அவன் மூன்று நாட்களுக்கு பாலும் கொள்ளாமல் படுக்கை மூள்ளாக ரொம்பக் கஷ்டப்படுவான்! நேர்பார்வையைக் காட்டிலும் இது மிகவும் ஆபத்தானது!

'குறிக்கொண்டு நோக்காமை
அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள்போல நகும்"

நேராகப் பாராமல், ஒரு கண்ணைச் சுருக்கிக் கொஞ்சம் குனிந்து பார்க்கிறாள். இதிலே 'நகும்' என்று போட்டிருக்கிறானே இதில்தான் கவிஞனின் சொற்சாதுர்யம் பூரணம்பெறுகிறது. அவள் வேண்டுமென்று 'நக'வில்லை. "ஒருகண் சிறக்கணி"க்கிறாள்: உடனே உதடு "நகு"கிறது! ஆகா! மனோதத்துவம், உடற்கூறுதத்துவம் சகலமும் இதில் 'அடக்கம்.' வள்ளுவன் 'சர்ஜ'னாகவும் இருந்திருக்கிறான்!

அப்படி அவள் கண்ணால், அந்தக்காளையைக் கொள்ளை கொள்கிறாளே, இது காதலில் எத்தனை 'பெர்சண்ட' தெரியுமா? வெறும் பார்வை—அதிலே ஒரு உள்ளம் கொள்ளை! இதிலே காதல் கதையின் எவ்வளவு பகுதி பூர்த்தியாகிறது? உங்களைத்தான் கேட்கிறேன்; எத்தனை பெர்சண்ட்? முதல் பார்வை—அன்புப்பார்வை - மட்டும்தான் நடந்திருக்கிறது. இன்னும் காதலின் பல பகுதிகள் பாக்கியிருக்கின்றன! ஆகவே இந்தப் 'பார்வை' அத்தியாயம் அந்தக் கதையில் எவ்வளவு பகுதியாகும்? நீங்களும் நானும் இதற்கு சுமார் '25 பெர்சண்ட்' கொடுப்போம். இல்லையா? ஆனால் வள்ளுவன் தெளிந்த கணித நிபுணன்! அவன் எவ்வளவு கொடுக்கிறான் தெரியுமா?

"அடபைத்தியக்காரர்களே; கண்களவுகொள்ளும் அத்தியாயம் காதலில் பாதிக் கதையை முடித்து விடுகிறது என்று கணக்குப் போடாதீர்களடா? அது அதற்கும் மேல் பெரும் பாகத்தை முடித்துவிடுகிறது. அதற்கு அப்புறம் நடக்கும் விஷயங்களுக்கெல்லாம் கதையில் குறைந்த அளவு இடமே இருக்கிறது!" என்கிறான்.

பேசுதல், கைபற்றல், முத்தமிடல், கட்டிச் சேரல், புணர்வு மிழி மகிழ்தல் — இதெல்லாம் சுமார் 30 பெர்சண்ட்தான். காதல் கதையில் கண்பார்வையால்கொள்ளும் களவே, பெரும் பகுதிக்கதை என்கிறான் வள்ளுவன்!

கண்களவுகொள்ளும்
சிறு நோக்கம், காமத்தில்
செம்பாகம் அன்று : பெரிது!

அடித்துச் சொல்கிறான், "பாதி அன்று! அதனிலும் பெரிது!" என்று!

அட, சரி ஐயா! அந்தக் கதையில் கிளைமாக்ஸ் - என்ன தெரியுமா? அதாவது 'பார்வை' அத்தியாயத்தில் மட்டும்! (ஒவ்வொரு கதைக்கும் கடைசியில்தான் 'க்ளைமாக்ஸ்'வரும். இவன் முதல் அத்தியாயத்துக்கே 'க்ளைமாக்ஸ்' கொடுக்கிறான்.)

அவன் அவளைப்பார்த்தான்; அவள் அவனைப்பார்த்தாள் - அவ்வளவுதான். அவன், வாயைத் திறக்கிறான்; முடியவில்லை. பசை போட்டு ஒட்டியமாதிரி ஆகிவிடுகிறது! போகட்டும்; வாய்ப்பேச்சு எதற்கு? ஓசையின்றி எழுத்தின்றி உலகத்துக் கதையும் பேசி, கேள்வி கேட்டு பதில் சொல்லி, பிரச்சினை இருந்தால் தீர்த்து, இவன் நினைப்பதை அவள் செய்து, அவள் நினைப்பதை இவன் செய்து-சகல காரியங்களும் நடந்து முடிகின்றன. இவ்வளவும் வாயைத் திறக்காமலே நடைபெறுகின்றன. வாயைத்திறந்து என்ன பயன்! வாய்ச் சொற்கள்தான் என்ன பயனும் இலவே!

கண்ணொடு கண்ணிணை நோக்
கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல!

உதறிவிட்டதுமாதிரி கூறுகிறான். "டேய்! தேவையே இல்லை! போடா!" என்கிறமாதிரி! "எந்தப்பயனும்!" கிடையாது என்று முடிக்கிறான்.

"கண்ணிணை ஒன்றை ஒன்று
கவ்வி, அவை
உண்ணவும் நிலைபெறுதுணர்வு
நீங்கின......"

என்று என்பது முழுநீளம் பாடல் எழுதுகிறானே, கம்பன், அவனை இரண்டுவரியில் தூக்கிப் பந்தாடுகிறான் வள்ளுவன்!

காரை முத்துப்புலவர்

வ. உ. சி. இளைஞர் கழகத்தின் ஆறும் ஆண்டு விழா 24—10—54 ஞாயிறு மாலை 6-மணிக்கு சேத்துபட்டு வைத்தியநாதமுதலி தெருவில் நடைபெறும்.

தலைவர்:- வெ. சுப்ரமணியனார்.

பேச்சாளர்கள்:- பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை,

கலைஞர் மு. கருணாநிதி,

நாஞ்சில் கி. மனோகரன்.

குறிப்பு:- அவ்விழாவின் போது திரு. இரா. நெடுஞ்செழியன், பேட்டைப் பெரியார் சே. ப. முருகேசனார் ஆகிய இருவரின் படத்திறப்பும் நடைபெறும்

தொடர் கதை

தமிழாக்கம்: ரா. வேங்கடசாமி

கூடியிருந்த அனைவரும் ஒரு முறை கை தட்டி ஆர்ப்பரித்தார்கள். விருந்தின் வெற்றிகரமான முடிவு அதுதானே? முகத்தில் பெருமிதம்களைகட்ட சந்தோஷப் புன்னகை பூத்தாள், திருமதி ஜோஸ்ராண்டு தன் குழந்தைகளைப் பார்த்து. மாமார் அவசரமாக பாக்கி பணத்தையெல்லாம் எடுத்து பையிற்குள் துருத்திக் கொண்டார். "இருபது பிராங்குகள் வேண்டுமென்றால், கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொள்ள வேண்டுமே அல்லாது, இப்படியெல்லாம் குறுக்கு வழியில் சம்பாதிக்கக் கூடாது!" என்று அவர் வாய் முணுமுணுத்தது; தமது வெற்றியினால் சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்த சகோதரிகள் மிகவும் களைப்படைந்தவர்களாய் களைப்பட்டார்கள், அவர்களின் உதடுகள் இன்னும் துடித்துக் கொண்டிருந்தன.

இந்த நேரத்தில் வெளியில் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. உள்ளே இருந்தவர்கள் மெதுவாக சாப்பிட்டுக் கொண்டிருக்க...வெளியிலிருந்தும் விருந்தினர்கள் வந்து கொண்டிருந்தார்கள். விருந்து ஏறக்குறைய முடிந்து எல்லோரும் எழும் சமயத்தில்தான் வேலைக்காரி அடிலைட்,

"காம்பர்டனும், ஒரு வாலிபரும் வந்திருக்கிறார்கள்!" என்று அறிவித்தாள்.

"ஓ! அந்த வாலிபனா?"—நீங்கள் அவனைக் கூட அழைத்திருக்கிறீர்களா? இன்று காவல்காரனிடம் அவன் பேசிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறான்!" என்றாள், ஜூலியர் தன் பக்கத்திலிருந்த காஷியரிடம். திருமதி ஜோஸ் வரவேற்பு அறைக்குப் பறந்தாள். அவளைப் பொறுத்த வரையில் காம்பர்டன் மிகவும் அருமையான பக்கத்து வீட்டுக்காரர். அதை அடிக்கடி அவள் காம்பர்டனிடமே சொல்லி வைத்தாள்!

"ஏன் உங்கள் மனைவியை நீங்கள் அழைத்துக் கொண்டு வரவில்லை!" என்று கேட்டாள்.

"அவளுக்கு உடல் நலம் சரியாக இல்லை!"

"இருந்தால் என்ன? சாதாரண உடையோடு வந்தால் கூட நான் எவ்வளவோ சந்தோஷப்படுவேனே!" என்று சலித்துக் கொண்டாள்.

இப்படி காம்பர்டனோடு பேசிக் கொண்டிருந்தாளே ஒழிய, அவளுடைய கண்கள் ஆக்டேவை அளவெடுத்துக் கொண்டிருந்தன. அடிக்கடி புன்னகை சிந்தினாள்! ஆக்டேவோ, அவளை வைத்தகண் வாங்காமல் கவனித்துக்கொண்டிருந்தான் காம்பர்டன். இதை எங்கே கவனிக்கப் போகிறார்? அவர் பேச்சு சுவாரஸ்யத்தில் இருந்தார். காஷியர் ஜோஸ்ராண்டு ஆக்டேவை தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தபோது, அவள் செய்த உபசாரத்தில், ஆக்டேவ் திணறிப் போனான்.

அத்தியாயம் 7

இவர்கள் வந்து சேர்ந்த பின்னர்தான் இன்னும் சில விருந்தாளிகள் வந்தார்கள். பெருத்து விட்ட தாய்களுக்கு அருகே வந்த நோஞ்சன் குழந்தைகளும், தந்தைகளோடு வந்த குழந்தைகளும்—மாமரிக்களோடு வந்த குழந்தைகளும் அங்கு இப்போது இருந்தார்கள். குழந்தைகள்...என்றால் இங்கு வயதுப் பெண்கள் என்று அர்த்தம்.

ஜூலியரும், கௌலினும் பாச்சிலார்டு மாமாவும் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்று கொண்டு வந்தவர்களை கிண்டல் செய்த வண்ணம் இருந்தார்கள்.

மாமாரின் வாயிலிருந்து விரசமான வார்த்தைகளும், கதைகளும் தாராளமாக வந்து கொண்டிருந்தன!

ஜூலியர், இம்மாதிரி பேச்சுக்களை சலிக்காமல் கேட்டாள். சந்தோஷமாகக் கேட்டாள்—மறுத்துப்பேச மாட்டாள். ஆனால் ஜோஸ் பயந்தாள். தனது தமையன் பேசுவதைக் கண்டு வந்த விருந்தாளிகள் முகம் சுளித்துக் கொண்டால்...... ! மாமார் மிகவும் 'பயங்கரமான மனிதர்' என்று பெயர் எடுத்தவர்; கௌலின் அதற்கு நேர் மாறானவன்; சந்தர்ப்பம் எவ்வளவு சாதகமாக இருந்தாலும், அவன் பெண்களிடம் மட்டும் வலுவில் போய் சிக்கிக் கொள்ள மாட்டான். தைரியமில்லை என்ற காரணமல்ல....; அடுத்து நடக்கும் பலன்களை முன் கூட்டியே அவன் நினைத்துப் பார்த்ததுதான் அதற்குக் காரணம்!

கடைசியாக பெர்த் வெளியே வந்தாள்!

தன் தாயார் எங்கு நின்று கொண்டிருக்கிறாள் என்பதை கவனித்து, அங்கு போனாள். ஆக்டேவ் அருகில் நின்று திரும்பிப் பார்த்தான்.

"இவள்தான் என் மகள் பெர்த்! பெர்த், இவர்தான் ஆக்டேவ் மௌராட்!!" என்று இருவரையும் மிகவும் நாகரீக முறைப்படி அறிமுகம் செய்து வைத்தாள் ஜோஸ். அப்போது அவள் நின்று கொண்டிருந்த நிலையே மிகவும் கம்பீரமாக இருந்தது. இதைச் சொல்லிவிட்டு அவள் லேசாக தன் மகளைப்பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தம் என்ன என்பதை பெர்த் அறிந்துகொண்டாள். "நேரடியான நடவடிக்கையில் இறங்கு"—என்று தாய் மகளுக்கு இப்போது கட்டளை இடுகிறாள். நேற்று இரவு சொல்லிக் கொடுத்த பாடங்களை ஒருதடவை நினைத்துக் கொண்டாள் பெர்த்.

அடுத்த நிமிஷம் செயலில் இறங்கிவிட்டாள்!

ஏதோ விஷயத்தில் ஆரம்பித்து, நாட்டு விஷயங்களை அலசி, கடைசியில், நாகரீகத்தைப்பற்றி பேசி முடித்தாள் பெர்த். ஆக்டேவுக்கு பெர்த்தின் இந்த சரளமான சுபாவம் மிகவும் பிடித்திருந்தது. கர்வத்தோடு யாரோடும் பழகாமல் ஒதுங்கி நிற்கும் கன்னிப்பெண்களுக்கும்—இவளுக்கும் எவ்வளவு வித்தியாசம்—என்று நினைத்தான் ஆக்டேவ். இவர்கள் பேசிக் கொண்டிருந்த போது............

டர்பளாட் எங்கிருந்தோ பின் பக்கமாக இருந்து வந்தான். விருந்து முடிந்தவுடன் போனவன் இப்போதுதான் மீண்டும் காட்சி அளித்தான்.

அவன் நிலையைப் பற்றி கொஞ்சமும் யோசிக்காமல், "எங்கே போயிருந்தீர்கள் இவ்வளவு நேரமாக?" என்று கேட்டாள் பெர்த் அவனை.

அவன் குழம்பிப்போய் விட்டவனைப்போல, பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக நின்றான். சட்டென்று சமாளித்துக்கொண்ட பெர்த், நிலைமையை சீர்படுத்த, இரண்டு வாலிபர்களையும் அறிமுகப்படுத்தினாள்.

ஜோஸ் தன் மகளிடமிருந்து கண்களை எடுக்காமல் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தாள். இதற்காக அவள் ஒரு பக்கமாகபோய் அமர்ந்து விட்டாள் சோபாவில். இப்போது அவளுக்கு பூரண திருப்தி என்றுதான் சொல்லவேண்டும். மகள் சொன்னபடி நடந்துகொள்கிறாள் அல்லவா.

ஏதோ நினைத்துக்கொண்டவள்போல பெர்த்தை அருகே அழைத்தாள்.

"அவர்கள் வந்துவிட்டும்.. பிறகு நீ பியானோ வாசித்து பாடு!" என்றாள்.

'அவர்கள்' என்று அவள் குறிப்பிட்டது வபேயர் குடும்பத்தாரை. இப்போது அவளுடைய கண்கள் அந்த குடும்பத்தின் மேல் பதிந்திருந்தன.

பெர்த்தை அவள் தாயார் கூப்பிட்டவுடன், கௌலினும், ஆக்டேவும் தனித்துவிடப்பட்டார்கள். பேசாமலிருப்பது எப்படி? அவர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள்......

"கவர்ச்சிகரமான தோற்றமிருக்கிறது!"

"ஆமாம்! மோசமில்லை"

"நீல நிற ஆடை அணிந்து கொண்டு அதோ நிற்கிறாளே அவள்... இவளுடைய மூத்த சகோதரி இல்லையா? அவள் ஒன்றும் அவ்வளவு அழகி அல்ல!"

"ஆமாம்... உடம்புகூட மிகவும் ஒல்லியாகத்தான் இருக்கிறது"

இப்படி ஓடியது அவர்களது சம்பாஷணை!

டர்பளாட்டும் இளைஞன் தான். பரந்ததோள்கள். நல்ல உயரம். ஆனால் ஆக்டேவைப் போல் கவர்ச்சிகரமான உருவம் படைத்தவன் அல்ல!

"ஆமாம் தெற்குப் பக்கத்திலெல்லாம் பெண்கள் மிகவும் பருத்து இருப்பார்கள்......... இல்லையா?" என்றான் டர்பளாட்!

ஆக்டேவ் பதில் சொல்லாமல் சிரித்தான். அவர்கள் இருவரும் நண்பர்களாகி விட்டார்கள். அவர்கள் இருவருக்கும் பிடித்தமாக பல விஷயங்கள் இருக்கவே......அவர்கள் நட்பு மிகவும் நெருங்கியது. ஒதுக்குப்புறமாக ஒரு சோபாவில் அமர்ந்து அவர்கள் மெதுவான குரலில் சம்பாஷிக்க ஆரம்பித்தார்கள். ஆக்டேவ், தன் எஜமானி திருமதி ஹெடுவினைப்பற்றி வர்ணித்தான். பேச்சோடு பேச்சாக தனக்கு "பெண்கள் ஸ்வர்க்கத்"தில் குமாஸ்தா வேலை என்பதை சொல்லி விட்டான். ஹெடுவின் அழகை டர்பளாட்டும் ஆமோதித்தான். தர்கு மண்டியில் வேலைக்கிருப்பதாக டர்பளாட், தன்னைப்பற்றிக் கூறிக் கொண்டான். தான் இருக்கும் இடத்தில் ஒரு வேலைக்காரி இருப்பதாகவும்... அவளுடைய கட்டுமஸ்தான தேகம் யாருக்குமே இரா

தென்றும்வர்ணித்தான். இந்த நேரத்தில் வெளிக்கதவு திறந்தது.

மூவர் உள்ளே நுழைந்தனர்.

அவர்களைக் கண்டவுடன் டர்பளாட் தனது புதிய நண்பனுக்கு அவர்களைப்பற்றிச் சொன்னான்.

"இவர்களெல்லாம் வபேயர் குடும்பத்தவர்கள். முதலில் வருகிறானே அவன்தான் வீட்டுக்காரரின் பெரிய மகன் அகஸ்தே. அவனுக்கு முப்பத்திரண்டு வயதாகிறது. அடிக்கடி அவனுக்கு தலைவலியும், கண் உளைச்சலும் ஏற்படுவதால், அவன் லத்தீனம் படிப்பது கெட்டுப்போய்விட்டது. அதனால் அவன் வியாபாரத்தில் இறங்கிவிட்டான்.

சிவந்த தலைமயிரோடு அடுத்து வருகிறானே அவன் தியாபில்லஸ். வயதானவனைப் போல் தெரிகிறதென்றாலும் அவனுக்கு வயது இருபத்தியெட்டுதான். இவனும் நோயாளிதான். என்னென்னமோ செய்துவிட்டு கடைசியில் வியாபாரமும் செய்தான். எதிலும் உருப்படியாக வழியில்லாததால், ஒரு பெண்ணை மணந்து கொண்டு சுகமாக இருக்கிறான்.

அதோ பாருங்கள் மூன்றாவதாக வருகிறாளே அவள்தான் அவன் மனைவி. அவள் பெயர் வெல்ரி!"

டர்பளாட் முடித்தவுடன்; ஆக்டேவ் ஆரம்பித்தான்.

"இவளை நான் ஏற்கனவே பார்த்திருக்கிறேன். அவள் தகப்பனும் சில்லறை ஜவுளி வியாபாரிதானே? முகத்திற்கு திரை அணிந்திருந்ததால் நான் முதலில் ஏமாந்துபோய்விட்டேன். அழகு அதிகமில்லாவிட்டாலும், ஒருவிதமான கவர்ச்சி இருக்கிறது, கவனித்தீர்களா?" என்றான்.

"கண்களின் கவர்ச்சி சிலருக்குத்தான் பிடிக்கும். உடம்பைப் பார்த்தீர்களா? ஒல்லியாகத்தானே இருக்கிறாள். இப்படிப்பட்ட தினுசு நமக்கு உதவாது சார்!" என்றான் டர்பளாட்.

ஜோஸ் தன் இருக்கையை விட்டு எழுந்தாள் வெல்ரியுடன் கைகுலுக்க.

"எங்கே உங்கள் மாமனார் வபேயரைக் காணோம்? துவிரேயர் தம்பதிகள் வருகிறேன் என்று சொல்லி வராமல் இருந்துவிட்டார்கள். அவர்களெல்லாம் வந்தால்...நான் கௌரவமடைந்து விடுவேன் என்று வரவில்லையா?"

ஜோஸ் இம்மாதிரி பேசியதற்கு வெல்ரி ஏதாவது பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்?

தன் மாமனாருக்கு வயது அதிகமாகிவிட்டது. அதனால் அவர் வீட்டிலேயே இருந்து விட்டார் என்றாள் வெல்ரி. துவிரேயர், வெல்ரியின் சகோதரர்.

"அவர்கள் வர முடியாததற்கு மன்னிப்பு கேட்கச் சொன்னார்கள்!" என்று வெல்ரி தன் தமையன் சார்பாக கேட்டுக்கொண்டாள். ஆனால் உண்மை வேறு!

துவிரேயர் தம்பதிகளுக்கு அரசாங்க விருந்தொன்றுக்கு அழைப்பு வந்திருந்தது. அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் போய்விட்டார்கள்.

ஜோஸ் உதட்டை கடித்துக் கொண்டாள். அவளது வெறும் 'உ' தண்ணீர், அரசாங்க விருந்துக்கு ஈடாகுமா? பொறுமையாக இருந்தாள் ஜோஸ்.

அவளுடைய இரண்டுபெண்களுக்கும் கல்யாணமாகி மருமகப் பிள்ளைகள் வீட்டுக்கு வந்து விட்டால்......அவனும் இம்மாதிரி விருந்துகளுக்கு போக முடியும் இல்லையா? உம்...அதைப்பற்றியெல்லாம் இப்போது யோசனை எதற்கு?



"சீக்கிரம் உன்னை தயார்படுத்திக் கொள், குழந்தை!" என்றாள் அவள் பெர்த்திடம் மெதுவான குரலில். பெர்த் பியானோ அருகில் சென்று அதைத் திறந்தாள். "சப்தம் செய்யாதீர்கள்!" என்று யாரோ சங்கிதப் பிரியர்கள் சப்தமிட்டார்கள்.

"மிக்க வந்தனம், மிஸ்டர் ஆக்டேவ் உங்களுக்கு சங்கிதம் என்றால் பிடிக்குமல்லவா ...இப்படி அருகில் வாருங்கள் ...என் மகள் பெர்த் பாடுகிறாள்" என்றாள் ஜோஸ்.

"போங்க சார்!" என்று டர்பளாட் ஆக்டேவை உந்தினான்.

தன் இருக்கையை விட்டு எழுந்து ஆக்டேவ் பியானோ அருகில் போய் நின்றான்.

அதென்னமோ ஆக்டேவின் மீது ஜோஸுக்கு அவ்வளவு பிரியம். பெர்த் அவனுக்காக பாடுபவள் போலல்லவா ஜோஸ் ஏற்பாடுகள் செய்தாள்.

"எங்கே பாட ஆரம்பி குழந்தை...பக்கத்தில் நண்பர் ஆக்டேவ் இருக்கிறார்!" என்று ஜோஸ் கடைசியாக குரல் கொடுக்க,

பெர்த், கொஞ்சம் கூட நடுக்கமில்லாமல் பாட ஆரம்பித்தாள்; கொஞ்சம்கூட தவறாமல் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக ஜோஸ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். முதல் இரண்டு பாட்டுகளையும் கவனித்துக் கொண்டிருந்த ஆக்டேவின் கவனம் இப்போது பாட்டில் இல்லை. அவன் கண்கள் வெல்ரியை பார்த்துக் கொண்டிருந்தன.

வெல்ரி அப்படி ஒன்றும் பிரமாதமாக அலங்காரம் செய்து கொண்டிருக்கவில்லை. ஏதோ சுமாராக ஆடை மட்டும் அணிந்திருந்தாள். அப்படியிருந்தும் அவளிடம் கவர்ச்சி இருந்தது; கண்களில் சூன்யப் பார்வையோடு அவள் பாட்டில் மனம் லயித்து புன் சிரிப்போடு அமர்ந்திருந்தாள்.

இந்த நேரத்தில் யாரும் எதிர்பார்க்காத ஒரு சம்பவம் நடந்தது.

அத்தியாயம் 8.

உள்ளே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை பற்றி சிறிதும் அக்கறை கொள்ளாமல் ஒருவர் 'தடதட' வென்று வந்தார்.

"ஓ! டாக்டர்" என்றாள் ஜோஸ் சற்று கோபத்தோடு. டாக்டர் ஜூலிராட் உள்ளே வந்து மெதுவாக மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்போது பெர்த் மிகவும் உருக்கமாக ஒரு வரியை பாடிக் கொண்டிருந்தாள். விருந்தாளிகள் மிகவும் ரசனையோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஆகா!" "மிகவும் நன்றாக இருக்கிறது" "அற்புதம்" என்ற வார்த்தைகள் முகஸ்துதியாக வெளிவந்தன ஒவ்வொருவரிடமிருந்தும்!

பாட்டு முடிந்தது. கை தட்டல் எழுந்து ஓய்ந்தது உண்மையாக பெர்த் நன்றாகப் பாடினாள். சிலர் பாட்டு அதற்குள் முடிந்து விட்டதா என வியப்படைந்தார்கள்.

"உங்கள் மகள் மிகவும் நன்றாகப்பாடுகிறாள், நான் இம்மாதிரி சங்கீதத்தை இதுவரை கேட்டதில்லை!" என்றான் ஆக்டேவ், ஜோஸிடம்.

"உண்மையாகவா? ஏதோ சுமாராக வாசித்தாள். நானும் அதை ஆமோதிக்கிறேன்; குழந்தை எங்கள் பொக்கிஷம் பாருங்கள்; அதனால்அவளுக்கு வேண்டியதை அடைகிறாள். நீங்கள் அவளோடு சரியாகப் பழகவில்லை. பழகினால் தெரிந்து கொள்வீர்கள்...." என்று ஜோஸ் ஆரம்பித்து விட்டாள்.

பெர்த்பியானோ அருகேயே அமர்ந்திருந்தாள் சிரித்தமுகத்தோடு. புகழ்மாலைகளைபுன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டாள். அந்த இடத்தைவிட்டு எழுந்துவர அவளுக்கு பயம்! தாய்கோபித்துக்கொண்டால்? எல்லோரும் ஒவ்வொருவரும் 'சள' 'சள' வென பேசிக் கொண்டிருந்தார்கள்.

விடுதலை பெற்ற ஆக்டேவ் பாதிநித்திரையிலிருந்த டர்பளாட்டிடம் பாய்ந்து வந்தான் அவர்களுக்குப் பக்கத்தில் ஒரு சிறு கும்பல் நின்று கொண்டிருந்தது டாக்டர் ஜூலிராட்டைச் சுற்றி. டாக்டர் ஜூலிராட் மிகவும் வயதானவர்; சுற்று வட்டாரத்திலிருந்த தாய்மார்களுக்கெல்லாம் பிரசவம் பார்த்தவர் அவர்தான். மேலும் பெண்கள் வியாதியில் அவர் பெயர்போனவர். ஆண்களும் சில சமயத்தில் இரகசியமாக அவரிடம் வைத்தியத்திற்குப் போவதுண்டு.

டாக்டரைப் பற்றி சட்டை செய்யாமல், ஆக்டேவும் டர்பளாட்டும் பேச ஆரம்பித்தார்கள்.

"ஏன் சார் உங்களுக்கு எல்லாவிஷயமும் தெரிந்திருக்கிறதே, திருமதி காம்பர்டனுக்கு என்ன நோய் என்று சொல்ல முடியுமா?" என்றான் ஆக்டேவ்.

"அவளுக்கு வந்து சார்..." என்று ஆரம்பித்த டர்பளாட், சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, ஆக்டேவின் காதில் என்னமோ இரகசியமாகச் சொன்னான். முதலில் சிரித்த ஆக்டேவ்...பிறகு ஆச்சர்யமடைந்தான்.

"அப்படி இருக்க முடியாது!"

"நான் சொல்வது உண்மை சார்; இதே நிலையில் இன்னொரு பெண் இருப்பதும் எனக்குத் தெரியும்!" என்றான் டர்பளாட்.

"கர்ப்பமான பிறகு...இம்மாதிரி நிலை ஏற்படுகிறதென்று சொல்லுகிறீர்கள்!" என்றுகூறி விட்டு மீண்டும் ஆக்டேவின் காதில் ஏதோ முணு முணுத்தான்!

(தொடரும்)

கட்டபொம்மன்

சிலம்பின் செல்வன்..

கதையமைப்பையோ - கற்பனைக்கருத் துக்களையோ - சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் இசைவு பெறல் வேண்டும்.

(முன் இதழ் தொடர்ச்சி)

காட்சி 35

[கோலார்ப்பட்டியில் போர்; ஒருபுறம் கட்டபொம்மனைச் சார்ந்தோர் மறுபுறம் எட்டப் பனைச்சார்ந்தோர்]

[தனித்து எட்டப்பனும் கட்டபொம்மனும் போர் செய்கின்றனர்; எட்டப்பன் கீழே சாய்கின்ருன்]

கட்டபொம்மன் : கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்துக் கண்ணியம் பெற எண்ணும் துட்டனே !

(வீரபாண்டியன் வாளினை எட்டப்பன் மார்பில் பாய்ச்சப்போகின்ருன்)

எட்டப்பன்: கட்டபொம்மு வேந்தே! விட்டு விடு; எட்டப்பன் உனக்குக் கட்டியங்கூறுவான்; கால் வழிச் செல்வான் !

கட்டபொம்மன் : சீ ! கோழையே ! படுகளத்திலே ஒப்பாரி வைக்கின்ருயா ? பேடியே ! எட்டப்பா ! இனி எங்காவது எட்டிப்பார்த்தால் !

எட்டப்பன் : இல்லை...ஒருபோதும் இல்லை !

கட்டபொம்மன் : பாஞ்சாலங்குறிச்சி வீரர்களே பாய்ந்தோடிப் புறப்படுங்கள் !

(விளக்கு அணைகிறது)

(தானுதிபதி, வீரபத்திரபிள்ளை சௌந்தரபாண்டியன்—மூவரையும் பானர்மென் கைது செய்து விடுகின்ருன்)

பானர்மென் : எங்கே வீரபாண்டியன் ?

எட்டப்பன் : தப்பியோடிவிட்டான் ! புலிக்கு முன் பூனை என்ன செய்யும்! என்னேடு எதிர்த்தான்—எட்டியுதைத்தேன் எட்டப்பா விட்டுவிடு என்ருன் ! எங்கேயோ ஆளைக் காணேம் ! ஏமாற்றி யோடிவிட்டான்.

பானர்மென் : கட்டபொம்மன் கெட்டி பொம்மன்தான்......(மூவரையும் பார்த்து) உங்கள் முடிவு ?

காட்சி 36

[பானர்மென் தலைமையில் நீதிமன்றம்; கைதிகளாய் நிற்கின்றனர், தானுதிபதி பிள்ளை, வீரபத்ரப்பிள்ளை, சௌந்திரபாண்டியன் மூவரும்]

சௌந்தரபாண்டியன் : எமது முடிவு-எங்கள் முடிவுதானே ! எது என்று எங்களுக்கே தெரியும். எந்த வீரபாண்டியனை விரட்டியடிக்க நினைக்கிறதோ வெள்ளையர் கூட்டம்-அந்த வீரபாண்டியன் என்தோழன்— என் உடன் பிறந்தான்—என் நாட்டான்—என் இனத்தான்—இன்னுமா தெரியவில்லை எமது முடிவு ?

பானர்மென் : அதைக் கேட்கவில்லை......

சௌந்தரபாண்டியன் : பின் எதைக் கேட்கின்றீர் ?

பானர்மென் : மூர்க்கனே ! முடிவை நினைத்துப்பார் ? தானுதிபதி பிள்ளையின் தலை பாஞ்சாலங் குறிச்சியின் கோட்டை முன்னே கொடிமரத்தில் தொங்கவிடப்படும் காட்சியை—கேட்ட பின்னரும்.....

சௌந்தரபாண்டியன் : வேட்டை நாயே ! வெள்ளையர் கூட்டமே ! வெளியேறு ! வெளியேறு ! இன்றேல் வெட்டி வீழ்த்திடுவோம் கருங்கடலில்......கருங்கடல் செங்கடல் ஆகும் காட்சியைக் காணுதே போ—போ—போய்விடு.

பானர்மென் : என்ன திமிர். தூக்குக் கயிற்றிலே தொங்கப் போகும் நேரத்திலே வருத்தம்தெரிவிக்க மறுக்கின்ருன் துஷ்டன். இது நீதி மன்றம்.

சௌந்தரபாண்டியன் : அநீதிக்கு ஆக்கந்தேடும் இந்த இடத்திற்குப் பெயர் நீதி மன்றம், அன்னியர்களை வஞ்சத்தால் அழித்தொழிக்க வந்திருக்கும் உங்களுக்குப் பெயர் நீதிபதிகள். பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் இந்தப்படாடோபக்கூட்டம் (பாளையக்காரர்களைப் பார்த்து)பக்கத்துணை. இந்த கூட்டத்திற்கு நான் வருத்தம் தெரிவிக்க வேண்டுமாம் வருத்தம்.

பானர்மென் : தானுதிபதி வருத்தம் தெரிவித்தான்! நீயோ.....

சௌந்தரபாண்டியன் : தானுதிபதி வருத்தம் தெரிவித்தார் எதற்காக ? கன்னித்தமிழ் நாட்டைக் காட்டிக்கொடுக்கவா ?... அன்று மன்னனும் அண்ணனை மதிமயங்கிக் கெடுத்தானே...... அந்த விபீஷணன் அவர் அல்ல இவர்...இந்த மந்திரி சுப்பிரமணியம் ...இந்தத்தானுதிபதி சுப்பிரமணியப்பிள்ளை...உங்களிடம் மன்னிப்புக்கேட்டது எதற்காக. உங்களை மரணப்படுக்கைக்கு அனுப்ப... (சிரிப்பு) மூடனே வருத்தம் தெரிவிக்க வேண்டுமாம் வருத்தம். தலைவணங்காப்பாண்டியன் தரணியழிந்தாலும் தன்மானத்தை விட்டு உமது முடி வணங்கான்.

பானர்மென் : துட்டனைத் தூக்கு மேடைக்குக் கொண்டு போ...(இழுத்துச் செல்லப்படுகின்றனர்)

காட்சி 37

நால்வர் தூக்கு மேடையில்......

1-வெள்ளையத்தேவன் 2—தானுதிபதி 3—சௌந்திரபாண்டியன் 4—வீரபத்திரர் (முரசு கொட்டுவோன் வருகின்ருன்)

முரசாள் : .....இதனுல் சகலமான பேர்களுக்கும் தெரிவிப்பதென்ன வென்ருல்............பாஞ்சாலங்குறிச்சி நாடு முழுதும் கம்பெனிக்குச் சொந்தமாகி விட்டபடியால......உங்களைப் பாது காக்கும் பொறுப்பு அவர்கட்கே உரிமையாகி விட்டது...ஆதலால் இந்த ஆண்டு இந்த மாதம்...இந்த தேதி இந்த நேரம்—இந்த நிமிஷம் முதற்கொண்டு எவரொருவரும் தங்கள் கையில் ஆயுதம் வைத்திருக்கக்கூடாது......அப்படி வைத்திருந்தால் சட்டப்படி குற்றவாலியாக்கப்பட்டு தூக்கிலிடப்படுவார்கள்.........டும்......டும்......டும்.

கட்சி 38

சாலைவழி

வீரன் : ஏண்டா சூரா......கட்டபொம்ம ராசாவே சேர்ந்த வங்களே எப்படிடா கண்டு பிடிக்கிறது.

சூரன் : ஏண்டாப்பா கண்டு பிடிக்கணும்...

வீரன் : டேய் என்ன சொன்னே...........

சூரன் : அடே இல்லேப்பா...........பாஞ்சாலங்குறிச்சியிலே யிருக்கிற அத்தனை பேரையும் அரஸ்ட் பண்ணிட்டா போவுது.

வீரன் : அடே நீ ஒண்ணு. நம்ம அண்ணுவே அரஸ்ட் பண்ணி அவங்கப்பட்டபாடு தெரியுமா ? நாட்டிலேயே அவங்க தலைநீட்ட முடியலியே !

சூரன் : அதுயார்ரா ? அண்ணு..................!

வீரன் : இதுகூடவா உனக்குத் தெரியாது ?......அதாண்டா அண்ணு...............

சூரன் : என்னடா அண்ணு !............

வீரன் : அதாண்டா வெள்ளையத்தேவ அண்ணு

சூரன் : ஓகோ அவரைச் சொல்றியா ? அதிருக்கட்டும். எனக்கொரு புது யோசனை வருது.........

வீரன் : அதென்னடா ? புதுயோசனை...டில்லியிலிருந்தா... இல்லை.........

சூரன் : அடே இல்லேப்பா.........எல்லோரையும் அரஸ்ட் பண்ணினு...........சாப்பாடு போடவும் முடியாது ஜெயில்லேயும் இடமில்லை. அதனுலே யாரு வாயிலேயிருந்து கட்டபொம் முன்னு வந்தாலுஞ்சரி உடனே அவங்களையெல்லாம் அரஸ்ட் பண்ணி விடுவது.........

வீரன் : ஆமாண்டா அதான் சரியான யோசனை...(உள்ளே போகின்றனர்)

அஞ்சலை : ஏண்டா பஞ்சம். என்னடா இந்த அஞ்சலை பேச்சைச் கேட்க மாட்டேன்னுறே...

பஞ்சம் : இல்லேம்மா...............எனக்கு சஞ்சலம் தாம்மா வேணும்; இல்லேன்னு இந்தப்பஞ்சத்து உயிரு பறந்திடும்மா...... (சஞ்சலம் வருகின்ருள்)

அஞ்சலை : ஏண்டி சஞ்சலம்......நீதான் இந்தப் பஞ்சத்தைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளேன்...அட பண்ணித்தான் பாரேன், என்னமிஞ்சிப்போய்விடும்.......

சஞ்சலம் : அப்பப்ப வேண்டாம். இருக்கிற சஞ்சலம் போதாதின்னு பஞ்சத்தைக் கட்டிக்கொண்டு இன்னும் சஞ்சலப் படவா ? உள்ள சனியன் போதாதின்னு ஊருசனியனைத் தேடச் சொல்றியா ?

அஞ்சலை : அதான் அஞ்சலை இருக்கிறேனே ஆபத்தில் உதவ......

வளி

சஞ்சலம் : அதெல்லாம் முடியாது..... உன் மவனைக்கட்டிக் கிட்டு மாரடிக்கிறது யாரு? ஆளைப்பாரு உச்சிக்குடுமியும் ஒட்டுச் சட்டையும்...........

பஞ்சம் : அம்மா நீ சும்மா இரு இந்த சஞ்சலத்தை நான் கல்யாணம் கட்டாமே போவேனு ? (வீரர்கள் எட்டிப்பார்க் கின்றனர்) கட்டபொம்மு மீது ஆணை ! கல்யாணம் கட்டாமே போவேனு.

அஞ்சலை : இவனை ஏண்டா நீ கல்யாணம் கட்டாமே போறே.........(வீரர்கள் வருகின்றனர்)

சூரன் : ஏய், உன் பெயரென்ன ?

அஞ்சலை : ஏன் பேருதானே......அஞ்சலை......அஞ்சலை......

வீரன் : என்ன அஞ்சலையா? இப்ப நீ என்ன சொன்னே கட்டபொம்மே ! ஏன் நீ போறே ....ஏய் ஏய் ! நீ அப்படித் தானே சொன்னுய்?

அஞ்சலை : ஆமா ! ஆமா ! இப்ப அதுக்கென்னப்பா !

சூரன்: ஏய் அகப்பட்டுக் கொண்டாயா ? டேய் விலங்கை மாட்டு.

(விலங்கைப் பூட்டுகின்றனர்; பஞ்சத்தைப் பார்த்து)

வீரன் ; டேய் ! உன்பெயர் ?

பஞ்சம் : பஞ்சம்

வீரன் ; (சஞ்சலத்தைப் பார்த்து) உன் பெயர்?

சஞ்சலம் ; சஞ்சலம்.

வீரன் : சூரண்ணே ! இருவருக்கும் மாட்டு விலங்கை.

சஞ்சலம் : அய்யோ ! மச்சான் !

(கட்டி பிடிக்கிறுள் பஞ்சத்தை...இந்த சமயத்தில் வஞ்சம் வருகிறுன்)

பஞ்சம் : அய்யோ அப்பா

சஞ்சலம் : அய்யோ ! மாமா !

வஞ்சம் : டேய் ! ஏன் விலங்கைப் போட்டே

வீரன் : உன்னைக் கேட்டுத்தான் ! நீயாரப்பா !

வஞ்சம் : என் பேருதாப்பா வஞ்சம்.

(ஓங்கி இருவரையும் அடிக்கின்றுன்)

வீரன், சூரன் : ஐயோ (ஓடுகின்றனர்)

வஞ்சம் : டேய் ! இந்த வடநாட்டு வஞ்சம் இருக்கும் வரை பஞ்சத்தை பறக்கடிக்க முடியாது; அஞ்சலையை அதட்டி ஓட்ட முடியாது; சஞ்சலத்தை சாகடிக்க முடியாது. ஹுக்கும் நான்யாரு தெரியுமா ? வடநாட்டு வஞ்சமாக்கும்.

காட்சி 39

[வழிப்போக்கில் கருப்பாத்தாளும் அவள் கணவன் வெள்ளைச் சாமியும்]

வெள்ளைச்சாமி : ஏ ! கருப்பாத்தா ! வேகமா நடந்துவா ! எவனுவது வந்தா உன்னையும் கைது பண்ணிடப் போருன் !

கருப்பாத்தா : ஏ ! மச்சான் !! அவன் எவன் ? என்னைக் கைது பண்ணறவன் ? என் துரை நீ உயிரோட இருக்கும்போது ......அட நீதான் சும்மா இருந்தாலும், பாஞ்சாலங் குறிச்சியை விட்டுப் போரவரைக்கும் பாதுகாக்க வீரபாண்டியத்துரை இருக்கிருரே! என்மேலே துரும்பு பட்டா?

வெள்ளைச்சாமி : அடிபோடி பைத்தியக்காரி. உனக்கு என்னத் தெரியும் கட்டபொம்முராசா இருந்தா இந்தக் காலக்கோலம் வருமா ! அவருதான் எங்கே யிருக்காருண்ணே தெரியலையே ! அவரைச் சேர்ந்த பெண்டு பிள்ளை சின்னஞ்சிறுசு அனைவரையுந் தான் அரஸ்ட் பண்ணி சிறையிலே போட்டுட்டதே அரசாங்கம்

கருப்பாத்தா : ஏ ! மச்சான் ! அந்த அரசாங்கம் எது ! பெண் களை அரஸ்ட் பண்றது ! பெரிய ஆயுதத்தைக் கையிலே எடுக் காதே என்கிறது ! நாயக்கரை நையாண்டி பேசறது...

வெள்ளைச்சாமி : அதுயாரடி நாயக்கரு

கருப்பாத்தா : என்ன மச்சான்! உனக்கு நாயக்கரைத் தெரியாதா! வேறுயாரு மச்சான் ! இந்நாட்டிலே நாயக்கர் என்ற ழைக்க நாணயமானவங்க இருக்காங்க—

வெள்ளைச்சாமி : அவருயாருடி நாயக்கரு

கருப்பாத்தா : அவருதான் மச்சான் கட்டபொம்மு நாயக்க ராசா

வெள்ளைச்சாமி: கட்டபொம்மு நாயக்கராசாவே சொன்னியா! கட்டபொம்மு நாயக்கரும் வெள்ளையத்தேவ அண்ணுவும் இல் லேன்னு இந்த நாட்டு மங்களுக்கு மானம் ஏது ? வீரம் ஏது ?

கருப்பாத்தா : என் மச்சான் ! ஆயுதம் எடுக்கப்படா துங்கி ருனுங்க.

வெள்ளைச்சாமி : அவன் இடக்கிருன், பயந்தாங்கொள்ளிப் பயலுங்க.

திருப்புக் காட்சி 40

[முத்தனும் கொண்டையனும்]

முத்தன் : டேய் ! கொண்டே ! ஆயுதப்படையே எடுக்கக் கூதுன்னு தண்டோரா போட்டானுங்களே ! நீ ஏம்பா ! ...ந் காக்கிக் கொண்டுவர்றே ! அது வேறே எங்கே இருந்தா லாவது வெள்ளை நாயோடு சேர்ந்த கருப்பு நாய் கண்டு பிடித்துக் கடித்து விடப்போகிறது !

கொண்டை : ஆமாமா! இதுதான் இனி எதுக்கு? எந்த வீரன் சண்டைக்கு வரப்போகிருன் ? எல்லாந்தான் போர் என் ருல் தூங்கருன், புளியோதரை என்ருல் புறப்பட்டு வர்ரானே ! புல்லேந்திகள் பாடம் புதுப்பாட்டமாகி விட்டதே !

(திருப்பல்) **காட்சி 41** *(விகடகவி வருகின்ருர்)*

விகடர் : இனி என்ன இருக்கிறது ? வீரத்தை விற்று விட் டோம் ! மானத்தை மறந்து விட்டோம் ! தமிழ்நாடே நீ என்ன செய்யப் போகின்ருய் !

விகடகவி : (பாட்டு)

என் செயப் போகின்ருய்—தமிழா
என் செயப் போகின்ருய்
மானம் இழந்தாய் மதியைத் துறந்தாய்
ஈனத் தொழில் பல செய்தாய்—தமிழா

வீரனைக் காட்டிக் கொடுத்தாய்
வீரர் மரபில் உதித்தாய்
பாரத தேசத்தின் பண்போ—அன்றிப்
பைந்தமிழ் நாட்டவர் பண்போ—தமிழா

உன்னவனைக் கொன்று தின்ருய்
ஊரானை ஆளச் செய்கின்ருய்
அன்னியன் ஆட்சியை ஏற்ருய்
அன்னை மொழியை இகழ்ந்தாய்—தமிழா

நாயினும் கேட்டை அடைந்தாய்
நல்லினம் வாழ்தல் வெறுத்தாய்
பேயாய் திரிந்து உழன்ருய்
பிறந்த நாட்டை மறந்தாய் —தமிழா—

காட்சி 42

இடம் : புதுக்கோட்டைத் தொண்டமான் அவை.

உறுப்பினர் : தொண்டைமான் முதலியோர்

(தொண்டைமான் ஆசனத்தமர்ந்திருக்க வீரபாண்டியன் வருதல்)

தொண்டமான் : வாருங்கள் நண்பரே ! வாருங்கள் ! தங்கள் நல்வருகையைப் பெற நான் என்ன புண்ணியம் செய்தேன் ! ஆசனத்தில் அமர்ந்தருளுங்கள் ! அமர்ந்தருளுங்கள் !

கட்டபொம்மன் : வணக்கம் ! மிக்க வந்தனம் தங்களுக்குச் சிரமம் தந்து விட்டேன்.

தொண்டமான் : நண்பராகிய தாங்கள் அவ்வாறு நவிலக் கூடாது. திருக்களம்பூரில் தாங்கள் தங்கியிருப்பதாக நேற்றுத் தான் தெரிந்தேன் ! உடனே முத்துவைரவ அம்பலகாரரை படை யோடு அனுப்பி உங்களைப் பார்த்து அழைத்துவரச் செய்தேன்! நேரில் வந்து அழைத்துவர நினைத்தேன்; நீங்கள் விருந்தாக வரும் போது நான் இருந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய தாயிற்று............அதனுல்......

கட்டபொம்மன் : அதனுலென்ன ! பரவாயில்லை; விருந்தாக நானே வந்து விட்டேனே.

தொண்டமான் : இனி நீங்கள் இங்கேயே ஏகாந்தமாக வாழ லாம் ! எங்கும் ஏகவேண்டாம் ! துணை செய்யத் தொண்டமான் இருக்கின்றுன்.

இடம்பொருள் ஏவல் அனைத்திலும் உதவ தொண்டமான் இருக்கின்றுன் ! துயரப்படவேண்டாம் !

கட்டபொம்மன் : நண்பரே ! நன்றி ! விருப்பம் போல் தங்கலாம் !

தொண்டமான்:—[மனம் பேசுகின்றது]

தொண்டமான் ! புதுக்கோட்டைக் காட்டில் கட்டப் பொம்மன் சுற்றித் திரிகின்றுன் ! பிடித்துக்கொடுத்தால் புதுக் கோட்டை உமக்குத் தனியாட்சி ஆக்கப்படும்.....பானர்மேன்... எழுது எழுது பானர்மெனுக்குக் கடிதம் எழுது..........காட்டிக் கொடு..........

தொண்டமான் : ஆம்............

கட்டபொம்மன் : நண்பரே ! என்ன சொன்னீர் !

தொண்டமான் : இல்லை ! இன்று நமது நாடக அரங்கில் ஒரு நாடகம். அதைக் காணச் செல்வோம்.

கட்டபொம்மன் : நாடகத்தின் பெயர்.........

தொண்டமான் : "காட்டிக்கொடுத்தான்"

கட்டபொம்மன் . பெயர் புதிதாக இருக்கிறதே !

தொண்டமான் : நாட்டின் போக்கே புதிதாகத்தானே அமை கின்றது...........

கட்டபொம்மன் : நல்லது; இன்று ஒய்வு வேண்டும்...........

தொண்டமான் : அப்படியானுல் நாளையே நாடகம் பார் போம்.

ஊமத்துரை : நாடகத்தின் பெயர் "காட்டிக் கொடுத்தான்"

(தொடரும்)

சிரிப்புத்தான் வருகுதையா!

சில நாட்களுக்கு முன்பு ஒரு நண்பர் என்னிடம் ஓடிவந்தார். "கண்டேன்! கண்டேன்!" என்றார்! எ... த் தூக்கி வாரிப்போட்டது. அவர்முகத்தைப் பார்த்தேன்; அவர் உடம்பைப் பார்த்தேன்; வால் இருக்கிறதா என்று பார்த்தேன்— காணவில்லை! சீதையைச் சந்தித்துவிட்டு வந்த 'அனுமந்தன்' ராமனிடம் ஓடிவந்து "கண்டேன்! கண்டேன் சீதையை!" என்றானும்; இவரும் அவனது வாரிசோ என்று ஐயப்பட்டுத்தான் பார்த்தேன்; ஆனால் தோற்றம் மனிதனுகவே இருந்ததால் நமது நண்பர்தான் என்று நிர்மானித்துக் கொண்டேன். இராமனைச் சந்தித்த அனுமான்தான் எங்கே, "சீதையை" என்று ஆரம்பித்தால், "காணவில்லையோ" என்றெண்ணி இராமன் உயிரை விட்டு விடுவானே என்ற பயத்தால், "கண்டேன்" என்று ஆரம்பித்தானும். இவர் என் அப்படி ஆரம்பிக்கிறார் என்று புரியவில்லை. அவரைக் கையமர்த்தி, "எதை ஐயா கண்டீர்?" என்று கேட்டேன்.

"கண்டேன், ஆச்சாரியாரை!" என்றார்!

நான் விழுந்து விழுந்து சிரித்தேன்; யாராவது நம்மிடம் வந்து "தெருவிலே மரத்தைப் பார்த்தேன்" என்றால் நமக்குச் சிரிப்பு வராதா? தெருவுக்குத் தெரு மரம் இருக்கிற மாதிரி, ஆச்சாரியார் இப்பொழுது தெருவுக்குத் தெரு பேசஆரம்பித்திருக்கிறரே அவரைப் பார்ப்பதா கஷ்டம்? அதனுல்தான் நான் சிரித்தேன்!

உடனே அவர்; 'அட, ஏனையா சிரிக்கிறீர் ஆச்சாரியார்பேசினர்' அதைப்பார்த்தேன்!" என்றார்.

நான் மேலும் சிரித்தேன் பிறகு எனக்கு ஒரு சந்தேகம்; அதாவது ஒருவேளை ஆச்சாரியாருக்கு; மூளை "டிஸ் ஆர்டர்" ஆகி, தனியே பேசிக்கொண்டு நின்றாரோ என்று சந்தேகம் கிளம்பிற்று!

"தனியாகவா?" என்றுகேட்டேன்.

"இல்லை இன்னெருவரும்!" என்றார்!

ஆகா! இருவருக்கும் மூளைக் கோளாறு! என்ன துர்ப்பாக்கியம்!

"யார் அந்த மற்றொருவர்?" என்று கேட்டேன். மனதுக்குள்ளே "கல்கியோசுப்பிரமணியமோ?" என்றெல்லாம் குழப்பங்கள்.

அதையே கேட்டேன்.

அவர், "இல்லை! கிருபானந்தவாரியார்! என்றார். கிருபானந்தவாரியார்! அடடா! எண்ணெய் பூசிய பரங்கிப்பழத்திற்கு விபூதி சாத்தியது போல் இருப்பாரே; அவருக்கா மூளைக்குழப்பம்! என்னமோ மகா துர்பாக்கியம்!

"ஏனையா, இருவரும் எந்த ...ச்சந்தியிலாவது அசம்பாவிதமாக நடந்து, பேசி 'கலாட்டா' செய்தார்களா? கீழ்ப்பாக்கத்திலிருந்து 'வான்' வரவில்லையா? யாரும் 'டெலிபோன்' செய்யவில்லையா?" என்று கேட்டேன்.

அவர் பெருமாள் கோயில் யானைமாதிரி, கம்பீரமாகத் திரும்பினர்.

"நீர் ஒருபக்கம்! இருவரும் பொதுக்கூட்டத்தில் பேசினர்களையா!" என்றார்.

இருதயத்தை 'ஓவராயில்' செய்து வைத்தமாதிரி நான் பெருமூச்சவிட்டு நிம்மதியடைந்தேன்,

"பொதுக்கூட்டத்தில் பேசினர்களா! இதை ஒரு விஷயமாய்ச் சொல்லவந்திரே 'என்று கோபித்தேன். ஆனலும் கொஞ்சம் பரிதாபம்' பச்சாதாபம் ஆச்சாரியார் மீது ஏற்பட்டது அடாடா! அவர் எங்கேயெல்லாம் இருந்தார்! எப்பேர்பட்ட இடங்களி லெல்லாம் பேசினர்! எவ்வளவு பெரிய ஆட்களோடு பேசினர்! இப்போது கொட்டை சூடிமொட்டையுலகபூபதியோடு சமமாய் விட்டாரே! என்று வருந்தினேன்.

"பொருள் என்ன?" என்று கேட்டேன்.

"இராமாயணம்!" என்றார்! திடீரென்று எனக்கு மீண்டும் ஒரு சந்தேகம் வந்தது.

"அவரை, பக்கத்தில் போய்ப் பார்த்திரா?" என்று கேட்டேன்.

"ஆமாம்; ஏன்?"

"நன்றாகக்கவனித்தீரா?"

"கவனித்தேன்"

"கழுத்தில் ருத்திராட்சம் இருந்ததா? உடம்பில் காவி உடை உண்டா?"

"சீச்சீ! இல்லை! உடையும் உருவமும் பழைய மாதிரியே!"! என்றார்.

அவர்பேசியதெல்லாம் சொன்னர். அது, கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி திரும்பத் திரும்ப ஒரே விஷயமாக இருந்தது. சரி, அவரது அதிர்ச்சி இன்னும்விலகியபாடில்லைஎன்று தீர்மானித்து அவர் உயிரோடிருக்கும் இந்த வேளையிலேயே ஒரு இரங்கற்பா பாடினேன்! என்ன செய்வது; இருந்த பதவியை யாராவது நல்லவர்கள் பறித்துக்கொண்டால், மனிதன் உலவும் போதே பிணமாகி விடுகிறன்.

* * *

ஆச்சாரியாருக்குத்தான் அதிர்ச்சி என்றால் ஜீவானந்தத்துக்கு என்ன வந்தது... அவர் சமீப காலத்தில் ...ன்று ... தைப் பார்த்தால்..........."இது சரியான கோடைகாலம் போலும்?" என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது.

அவரது ராமாயணபக்தி பற்றி நமது நண்பர்கள் "ஜிவானந்த பாகவதர்' என்று குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி தோழர் ஜீவானந்தம், ஊறுகாய்ப் பானையில் விழுந்த பல்லி மாதிரி குதித்துக் குதித்துப் பேசியுள்ளார். (வண்டியிலிருந்து விழுகிற வைக்கோலை, தெரு நெடுகப் பொறுக்கித் தின்று கொண்டு போகும் 'காளைமாடு' மாதிரி செய்திகளைப் பொறுக்கிக் கொண்டு திரியும் 'தினத் தந்தி' இதை வெளியிட்டிருக்கிறது!)

"நானு பாகவதர்?" என்பது அவரது முதற்கேள்வி. காலட்சேப பாகவதர் ஆவது மடமை' என்பதை இந்தக் கேள்வி குறிக்கிறது! நன்றி; வணக்கம்!

"முன்பே பெரியார், கம்பனை அறிஞன் கலைஞன்என்றெல்லம் புகழவில்லையா?" இது இரண்டாவது கேள்வி.

புகழ்ந்தாரா? எனக்குத் தெரியாது! அப்போது நான் சிறுவன் அப்படி அவர் புகழ்ந்திருந்தால். எதற்காக புகழ்ந்திருப்பார்?

கம்பன் தமிழை லாவகமாகக் கையாளுகிறன்" என்று எண்ணியிருக்கலாம் அதற்காக அவன் "ராமன் கடவுள் - தமிழனைக் கொன்றன்" என்பதைப் புகழ்ந்ததாகவோ, அவன் "சமுதாய விஞ்ஞானி" என்று ஒப்பியதாகவோ அர்த்தம் கொள்ளவா முடியும்?" பக்கத்து வீட்டுப்பெண் அழகிலே இணையற்றவள் என்றால், அந்தப் பக்கத்து வீட்டுப் பெண்ணின் நடத்தை புனிதமானது, கற்புக்கு அரசி என்று அர்த்தம்? அவள் பார்வைக்கு அழகு அவ்வளவுதான்! நடத்தையைப் பிறகு ஆராய்ந்ததில் அவள் பாஞ்சாலி போன்றவள் என்பது தெரிந்தது! ஆகவே "மானங்கெட்டவளைத் துரத்து!" என்கிற கோஷம் எழும்பிற்று.

"கம்பனைப் புகழும், சோம சுந்தர பாரதி, வரதராசன் வையாபுரிப்பிள்ளை "ஆகியோர் ஒன்றும்தெரியாதவர்களா?" இது மூன்றாவது கேள்வி!

எல்லாம் தெரிந்தவர்க... கம்பராமாயண விவாதத்தில் அண்ணவிடம் தோற்று ஓடியவர்; வையாபுரியார் தமிழ் மொழியே சமஸ்கிருதத்திலிருந்து வந்தது என்று வாதிக்கும் மகாபுத்திசாலி! வரதராசன், கம்பனைப்பற்றி என்ன எல்லாத்திற்கும் விளக்கம் எழுதுவார்! "பகுத்தறிவுக்குப் புறம்பானவை; நம்மைத் தாழ்த்துபவை" என்ற பேதம் காட்ட பயப்படுவார். காரணம் அவர் ஆரியக் கோட்டையிலும் உலாவ ஆசைப்படுபவர்!

அதெல்லாம் இருக்கட்டும்...

"புரட்சிசெய்த ஸ்டாலினைக் காட்டிலும், 'அகிம்சை' பேசிய காந்தி ஒன்றும்தெரியாதவரா? ஆகவே ஆகிம்சையைக் கைக்கொள்" என்று அவதிப்படும்மக்களிடம் போய்ப் பேசுவது மடமையா இல்லையா? சொல்லுங்கள்!

—வணங்காமுடி

புதிய முகவரி

A. K. வேலன்

13 நல்லண்ண முதலி சந்து
ராயப் பேட்டை
சென்னை-14

மகிழ்ச்சிகரமான அறிவிப்பு

தம்பி

16—10—54 இதழ் முதல் 'தம்பி புதிய பல பகுதிகள் தாங்கி வெளிவருகிறன். விரைவில் **தில்லை-வில்லாளன்** தீட்டும் **காதல்சக்கிரம்** எனும் தொடர்கதை தொடங்க இருக்கிறது.

பூமாலை

அக்டோபர் இதழ் முதல் 4-அணு விலையில், சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் வெளிவருகிறது. **தில்லை வில்லாளன்** தீட்டும் **ராணியின் காதல்** எனும் காதல் ஓவியம் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.

சந்தாதாரர்கள் நிறைய சேர்ந்து ஆதரவு தருக.

விபரம்:

தம்பிஅலுவலகம்,
சிதம்பரம்.

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று கதறியபடியே கல் தூணில் தலையை மோதிக் கொண்டான் மணிமுடி; பிளந்துபோன அவன் தலையிலிருந்து 'குபு—குபு' வென்று ரத்தம் வழிந்து கொண்டிருந்தது; அவன் உயிரும் மெள்ள மெள்ள உடலை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தது.' 'செங்கமலம்!, நாம் ஜோடிப் புருக்கள்—இனி நமக்குள் பிரிவில்லை" அவன் வா... ...ந்து வெளி...

ஜோடிப் புருக்கள்

☆: ஏ. கே. வில்வம் :☆

பூக்காடு! வடிவழகிகள் வட்டமிடும் எழிலூர்; அழகுகலை வல்லார் சொல்லும் சிறப்பெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற பெண்மலர்கள் பூத்துக்குலுங்கும் கலைக்கூடம் அந்த நகரம். விண்மீன் தோட்டத்தில் ஒரு தங்க நிலா போல—அந்த நகரின் அழகுமங்கையரிடையே ஒளி விட்டாள் அந்த காரிகை! வார்த்தெடுத்த வெண்பளிச் சிலையோ, சேர்த்த அழகின் வார்ப்படமோ, ஓவியன் கைத்திறனால் உயிர் பெற்றாளோ? அழகுக் காவியத்தின் அழியாத கதாபத்திரமோ—என்றெல்லாம் வர்ணிப்பர் கவிகள், அவளைக் கண்டிருந்தால்! அவள் காலச் சிற்பியின் பதினெட்டாண்டு உழைப்பால் உருவான தங்கச் சிலை. பெயர் செங்கமலம். பெற்றோருக்கு ஒரே மகள்! அவள் தான் அந்த குடும்பத்திற்கு கண்.

அந்த பிறை நிலா மெள்ள மெள்ள வளர்ந்து கொண்டிருந்தது; அந்த வளர்ச்சி ஊரார் கண்களுக்கு குளிர்ச்சியை தராமல் இருக்குமா! அவள் மயிலென நடந்து கல்லூரிக்கு செல்லும் பொழுதும்—சிட்டென மாலை வீடு திரும்பும் பொழுதும்—அவளை சந்திப்பவர்கள்—ஒரு முறையாவது திரும்பிப் பார்க்காமல் செல்வதே கிடையாது; கல்லூரியிலும் அப்படித்தான். "பனிதூங்கும் பட்டு ரோஜா அவள் மேனி" என்பான் ஒருவன்: "மொட்டவிழா மல்லிகையடா" என்பான் இன்னொருவன். "பண்பமைந்த சண்பகமப்பா" என்பான் வேறொருவன்; இல்லை! இல்லை! "கண்போன்ற தாமரை. அந்த கன்னியின் காந்த உடல்" என்பான் மற்றொருவன்!

இப்படி அவளை வர்ணிக்கத் தொடங்கி விடும் வாலிபர் கூட்டம்; பொதுவாக செங்கமலம் எல்லோர் விழிகளுக்கும் விருந்தளித்துக் கொண்டிருந்தாள்.

தென்றலின் சந்திப்பால், இளம் உள்ளங்கள் மகிழ்வதைப்போல—வசந்தம் பட்டதும் வண்ணப்பூக்கள் சிரிப்பதைப் போல — பருவத்தின் அன்பணைப்பால் முற்றிய நிலவானாள் செங்கமலம்.

இப்பொழுதெல்லாம்--அவள் மேனியில் ஒரு பளபளப்பு! பார்வையில் இனந் தெரியாத மிரட்சி! உடலிலே பூரிப்பு—நடையிலே தளிச் சாயல்; கன்னங்களில் அழகின் தேக்கம்—ஏன்? அழகின் இருப்பிடமே அவள்தான்!

காதல் காவியம் பேசும் அவள் கண்களும்-பார்ப்பவரின் கண்ணைப் பின் ஒட்டும் அவள் கமலமுகப் பொலிவும் அந்த கல்லூரி இளைஞர்களைக்கொல்லாமல் கொன்று வந்தது. "கிடைக்குமா நமக்கிந்த கோகினூர் வைரம்" இதுவே அந்த இளைஞர் பலரின் ஏக்கம்! உடல் கருகி-உள்ளீரல் பற்றி—என் செய்வோம்--ஏங்குதையோ நெஞ்சம் என்றெல்லாம் வருந்தினர் அந்த அழகியின் தொல்லையால் தாக்கப்பட்ட காளையர் பலர்!

இந்நிலையில் செங்கமலத்தின் சிந்தையைக் கவர்ந்து விட்டான் ஒரு ஆணழகன்; பெயர் மணிமுடி: அவள் இதயத்தில் இவனும், இவன் இதயத்தில் அவளும் குடியேறி விட்டனர்: ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர்: 'இனி என்றும் பிரிவில்லை நமக்குள் - பிரிந்திடில் உயிர் இல்லை, என்ற அளவிற்கு பிணைப்பு வலுப் பெற்று விட்டது; இன்பத் தென்காற்றில் இணைந்து காதல் பாட்டிசைத்தனர்: மாடத்தில் கொஞ்சும் ஜோடிப் புருக்களாயினர்.

காலம் ஓடிற்று. ஒருநாள்! காய்ச்சல் என்று படுத்தாள் செங்கமலம்; சித்த வைத்தியர் முதல் சீமைப் படிப்பு முடித்த டாக்டர் வரை சிகிச்சைக்கு அழைக்கப் பட்டனர்; ஆனால் அவள் காதல் எவ்வளவு வேகமாக வளர்ந்ததோ அதைப் போலவே காய்ச்சலும் வேகமாக வளர்ந்தது — கொடிய நோயாக உருவெடுத்து அவள் குரல்வளையை நெறிக்க நேரம் பார்த்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது அவன் உள்ளத்தில் கொதித் தெழுந்த உணர்ச்சி அலைகளை கட்டுக்குக் கொண்டு வந்தான்—"செங்கமலம்......" ஆசை அனைத்தையும் குரலில் தேக்கி மெள்ள அழைத்தான். அப்பொழுது அந்த மருத்துவ மனையில் அமைதி நிலவிற்று.

"நீங்களா? என் மணிமுடியா? எப்பொழுது வந்தீர்கள்......!" மெள்ளக் கேட்டாள் செங்கமலம்.

"இப்பொழுதான்...என் செல்வமே......" பாசம் வழிய மணிமுடி பதில் சொன்னான்.

அடுத்து அந்தப் பாவை ஒன்றும் பேசவில்லை; கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள்.

"டாக்டர்" கீழ் குரலில் டாக்டரை அழைத்தாள் செங்கமலம்

"என்னம்மா.. உடல்எப்படி இருக்கிறது......சொல் செங்கமலம்......!" டாக்டர்களுக்கே உரித்தான குரலில் கேட்டார் அவர்.

"தினமணி"யின் பச்சை அயோக்கியத்தனம்!

"கல்லக்குடி" என்ற பெயரை டால்மியாபுரத்திற்குச் சூட்டியது பற்றி 'இந்து' உட்பட எல்லாப் பத்திரிகைகளும் செய்தி பிரசுரித்துள்ளன. அதிலே வடநாட்டு முதலாளித்துவத் திமிங்கிலம் கோயங்காவின் 'தினமணி'யில் பார்ப்பன ஆசிரியர் சிவராமன் பிரசுரித்துள்ள ஒரு செய்தி, "இந்திய சர்க்கார் அம்மாதிரி முடிவு ஏதும் செயயவில்லை" என்று கூறுகிறது. 'தினமணி'யின் பரம்பரை அயோக்கியத்தனத்தில் ஒரு பகுதி இது. எவ்வளவு காலத்திற்கு இது நடக்கும்?

நோய் தந்த வேதனையை விட அவள் இதயம் கவர்ந்தவனை பிரிந்து இருப்பதுதான் அவளுக்கு பெருந்துன்பமாக மாறி விட்டது. காய்ச்சலுடன் மன நோய் வேறு சேர்ந்து கொண்டது. தன் குலக் கொழுந்தின் நிலை வாடி வருவதைக் கண்ட அவள் பெற்றோர்கள் கலக்கம் அடைந்தனர்; 'எப்படியும் செங்கமலத்தைக் காப்பாற்றி விட வேண்டும்' இது அந்த பெற்ற நெஞ்சங்களின் பேராவல்! விழித்தகண் மூடாமல் செங்கமலத்தைக் கிடத்திருக்கும் கட்டிலருகிலேயே இரவும் பகலும் சோகச் சித்திரங்களாய் அமர்ந்து கொண்டிருந்தனர் அவள் தாயும், தந்தையும்.

ஜோடி சேர்ந்தபின் பெண் புருவை மட்டும் பிரித்து விட்டால்—ஆண்புரு துடிக்குமே—அதைப்போல துடித்தான் மணிமுடி; "உயிரனையாள் எப்படியும் பிழைக்க வேண்டும், அதற்கு என் உயிர் வேண்டுமானால் விலையாகட்டும்" என்ற இறுதி முடிவிற்கு வந்து விட்டான் மணிமுடி; நடந்தான் வேகமாக—ஓட்டமாக — மருத்துவ மனையை அடையும்வரை ஓடினான்; அங்கே அந்த அழகு ராணி—இன்பரோஜா — இவன் நெஞ்சில் நின்றுவிட்ட அஞ்சுகம், இதயமாளிகையின் நந்தா மணிவிளக்கு, வாடிய மலர்க்கொடிபோல் கட்டிலில் சாய்க்கப்பட்டிருப்பதைக் கண்டான்.

"உடல் நோய் மட்டுமல்ல டாக்டர்—உள்ள நோய்தான் வளர்ந்து விட்டது"

"ஒளிக்காமல் சொல்லம்மா... நான் இருக்கிறேன்......உனக்கு வேண்டியதைச் செய்கிறேன்"

"நான் மணிமுடியை மணந்து கொள்ளவேண்டும் டாக்டர்..."

"இந்நிலையிலா—இப்பொழுதா..."என்னம்மா ! சொல்கிறாய !"

":ஆமாம் டாக்டர்...இந்நிலை மாற வேண்டுமானால் உடனே செய்யுங்கள்...அவரை எனக்குத் திருமணம் செய்து வையுங்கள்"

டாக்டருக்கு ஒன்றும் புரியவில்லை! திருதிருவென்று விழித்தார்.

"செங்கமலம்-- என் செல்வ மகளே !" ஏதோ சொல்ல வாயெடுத்தார் செங்கமலத்தின் தந்தை.

"தடை சொல்லாதீர்கள் அப்பா-என் நீண்டநாள் ஆசை! தயவுசெய்து தடை சொல்லாதீர்கள்" இப்பொழுது செங்கமலம் அழுது விட்டாள்; கண்களில் வழிந்த நீர் கன்னங்களில் கீறல் போட்டது;

விழிகளைக் குளமாக்கிக் கொண்டிருந்த செங்கமலத்தின் தாய் என் கண்ணே......என்ன செங்கமலம்..." அவள் அழுதாள்;

"அழவேண்டாமம்மா - நான் பிழைக்க வேண்டுமானால் திருமணம்தான் அதற்கு மருந்து" என்று ... விட்டு—மணிமுடி ...ன்ற பக்கமாக திரும்பி "மணிமுடி என் மன நோயை தீர்க்க மாட்டீர்களா—என்றாள்"

"மறுப்பேனா கண்ணே-மணப்பந்தலில் கூடுவோம்—ஒரே ஒருநாள்—நாம் இருவரும் ஜோடிப் புருக்களாய் வாழ்ந்தால் போதும்" இதற்கு பதில் ஒன்றும் சொல்லவில்லை செங்கமலம்; ஒரு பெருமூச்சு மட்டும் அவள் இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிக்கிளம்பி தென்றலுடன் கலந்து விட்டது. அங்கிருந்த அனைவர் முகங்களிலும் ஆச்சரியக் குறிகள் சதிராடிக் கொண்டிருந்தன.

'டாக்டர்'! செங்கமலத்தின் தந்தை டாக்டரின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தார்.

"நோயாளியின் மன நோய் வளரக் கூடாது; அவள் விருப்பப் படியே செய்வோம் என்றார் டாக்டர்.

மறு நாள் மணிமுடிக்கும் செங்கமலத்திற்கும் டாக்டர் முன்னிலையிலேயே திருமணம் நடந்தது; திருமணம் முடிந்ததும் செங்கமலத்தின் முகத்தில் ஒரு புதியகளை மின்னலிட்டது! பால் வண்ண நிலாவின் பார்வை பட்டதும் அல்லி மலர் விரிகிறதே அதைப் போல அவள் முகம் மலர்ந்தது; செங்கமலத்தின் இதழ் ஓரத்தில் ஒரு இளஞ்சிறிப்பு மெள்ள தவழ்ந்தோடிற்று!

கொஞ்சநேர அமைதிக்குப் பிறகு ஒரு கோப்பை தேனீர் தரும்படி கேட்டாள்; செங்கமலத்தின் தாய் கோப்பை நிறைய ஊற்றிக் கொடுத்தாள்; கோப்பையின் விளிம்பை அவள் கொவ்வை இதழ்கள் சுவைத்தன; "அத்தான்" என்று மெள்ள அழைத்தாள் மணிமுடியை; நெருங்கி உட்கார்ந்தான்; மணிமுடியிடம் அந்த தேனீர் கோப்பையை நீட்டினாள்; அவனும் ஒரு வாய் குடித்து விட்டு குவளையைக் கீழே வைத்தான்.

மீண்டும் ஒரு முறை—'மணிமுடி' என்றாள்.

'என்ன செங்கமலம்" ஆர்வத்தோடு இவன் கேட்டான்.

'நாம் ஜோடிப் புருக்களாகி விட்டோம்" இல்லையா என்றாள்.

"ஆம் செல்வமே' இது அவன் பதில்.

"அத்தான்...!" அவள் குரல் நடுங்கிற்று; ஆம்! அந்த ஒரு வினாடியில் அவள் முகத்தில் எத் தனை எண்ணக் கீறல்கள் உணர்ச்சியின் சாயல்! அப்டப -அந்த கடைசிப்பார்வை! சோ மழை பொழிந்தது; அவ பேசும் நீல விழிகளை இமை போர்வை திடீரென மூடி விட்டது.

ஆயிரம் முறை அழைத்திரு பார்கள் அங்கிருந்தோர்! ப னில்லை; பெற்றவர்களின் பாச குரலுக்கும் செவி சாய்க் வில்லை. செங்கமலம் சிலையா விட்டாள்,

"அய்யோ — என் இத விளக்கே நீ அணைந்து வி டாயா - இருண்டு விட்ட என்வாழ்வு ! இனி நமக்கு பிரிவில்லை—பிரிந்திடில் உ இல்லை என்றேனே...இனி உ ரேன் எனக்கு ? வாழ்வேன்

(9-ம் பக்கம் பார்க்க)